137

பாரதநாட்டுச்சரித்திரம்

-7 APR 1941
MADRAS

E.M. கோபாலகிருஷ்ணக்கோன்

மதுரை சென்னை

5-ம் வகுப்பு

விலை அணா 6

BharathaNattu Charitram

Class V

Prepared
According to the New Syllabus for Elementary Schools, 1939

BY
R. TIRUNARAYANA AYYANGAR, B.A., L.T.,
SENIOR HISTORY ASSISTANT
Madura College, A. R. High School, Madura.

954

E. M. GOPALAKRISHNA KONE
MADURA MADRAS

Copy Right) 1941 (Price As 6

Revised Edition 1941

V44

Printed at the Excelsior Power Press, Madura

முகவுரை

1939-ம் ஸு வெளிவந்துள்ள ஆரம்பக் கல்வியின் புதிய பாடத் திட்டத்தை யொட்டியே, இப் பாரதநாட்டுச் சரித்திரப் புத்தகங்களை முறையே மூன்றும், நான்காம், ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படக் கூடியனவாக எழுதியுள்ளேன். அரசாங்கப் பாடத் திட்டத்திற்கண்ட தலைப்புக்களையே இப்புத்தகங்களில் பாடல்களின் தலையங்கங்களாகக் கொண்டும், சரித்திரத் தொடர்பு விட்டுப் போகாவண்ணம் வெகு ஜாக்கிரதையுடனும், சிரமத்துடனும் தயாரித்துள்ளேன். இதன் நடை அவ்வகுப்புகளுக்கு ஏற்ப எளியதாகவும், மாணவர்கள் மனத்தில் ஊக்கத்தையும், சரித்திர ஆர்வத்தையும் எழுப்பக் கூடியதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. சரித்திர சம்பந்தமானவர்களின் உருவப்படங்களும், அழகிய வர்ணங்களாலான தேசப் படங்களும் ஆங்காங்கே சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் பயிற்சிகள் சேர்த்துள்ளேன். மாணவர்களுக்கு இவை பெரிதும் பயன்படுமென்பது என் துணிபு.

ஆசிரியர்களும், பள்ளிக்கூட அதிகாரிகளும் இப்புத்தகங்களை அன்புடன் வரவேற்று ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

மதுரை,
2-1-41.

ஆர். திருநாராயண அய்யங்கார்.

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	திராவிடர்கள்	1
2.	ஆரியர்கள்-வேதகாலம்	5
3.	பௌத்த மதம் பரவுதல்	9
4.	கிரேக்கர் படையெழுச்சியும், அதன் பலன்களும் ...	14
5.	சந்திரகுப்த மௌரியரும், சாணக்கியரும் ...	18
6.	மௌரிய சாம்ராஜ்யம்; ஆட்சி முறை	21
7.	சிலா சாஸனங்கள்	24
8.	பல்லவர்கள்	27
9.	சோழர்கள்	30
10.	சேரர்கள்	36
11.	பாண்டியர்கள்	39
12.	சந்திரகுப்தர் (விக்ரமாதித்யர்)	43
13.	முகம்மதியரின் படையெழுச்சிகள்-கஜினி மஹ்மூது	46
14.	முகம்மது கோரி	49
15.	மூன்று மதாச்சாரியர்கள்	53
16.	விஜயநகர இராஜ்யம்	58
17.	இந்தியாவில் முகலாய ஆட்சியை ஏற்படுத்திய பாபர்	62
18.	அக்பர்	65
19.	ஔரங்கசீப்	69
20.	இந்தியாவுக்கு வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் ...	73

21. மகாராஷ்டிரர்கள்-சிவாஜி 78
22. ராபர்ட் கிளைவ் 82
23. வாரன் ஹேஸ்டிங்ஸ் 85
24. ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் 88
25. வெல்லெஸ்லி பிரபு 92
26. பெண்டிங்க் பிரபுவும், இராஜா ராம் மோஹன் ராயும் ... 96
27. விக்டோரியா மகாராணியாரின் மகா சாஸனம் ... 99
28. வைஸராய்களின் ஆட்சியில் தேச முன்னேற்றம் ... 102

எங்கள் நாடு

மன்னும் இமயமலை
எங்கள் மலையே
மாநில மீததுபோற்
பிறிதி லையே!
இந்நறு நீர்க்கங்கை
யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற்
கெதிரெது வேறே?

....

பொன்னொளிர் பாரத
நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை
எமக்கில்லை யீடே.

பாரதியார்.

பாரத நாட்டுச் சரித்திரம்

ஐந்தாம் வகுப்பு

---

1. திராவிடர்கள்

நம்முடைய நாடு இந்தியா எனப்படும். இது செல்வத்திலும், நாகரிகத்திலும் உலகத்தில் மிகவும் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் ஒன்ருக இருக்கிறது. ஆனுல் எப்பொழுதும் நம் நாடு இப்பொழுது போல இருந்தது உண்டா? ஜன வாழ்க்கையும், நாடுகளும், நகரங்களும் ஆதிகாலத்தில் இக் காலத்திலிருப்பதுபோல இருந்திருக்கின்றனவா?

பூர்வீகக் குடிகள்

வெகு காலத்திற்குமுன் நம் நாடு காடடர்ந்திருந்தது. நாகரிகமற்ற காட்டு மனிதர்கள் அங்கு வசித்தனர். காட்டில் அகப்படும் காய், கனிகளும், அவர்கள் வேட்டையாடும் மிருகங்களின் மாமிசமுமே அவர்களுக்கு உணவாயின. மிருகங்

களின் தோலையே அவர்கள் உடைகளாக அணிந் தார்கள். அவர்களுக்கு நெருப்பின் உபயோகம் தெரியாது. ஆகவே, தங்கள் உணவை அவர் கள் பச்சையாகவே உண்டு வந்தார்கள். மலைக் குகை களிலும், மரப் பொந்துகளிலும் அவர்கள் வசித்தார் கள். கற்களினுல் செய்யப்பட்ட கத்தி, ஈட்டி, வாள் முதலிய கருவிகளையே அவர்கள் உபயோகித்தார்கள். எனவே, அவர்கள் வசித்து வந்த காலம் கற்காலம் எனப்

கற்காலக் கருவிகள்

படும். கற்கால மனிதரின் சந்ததியார்கள் இப்பொழு தும் இந்தியாவின் பற்பல இடங்களில் காணப்படுகி ருர்கள். நீலகிரி மலையில் வாழும் தோதவர்கள், மத்திய மாகாணத்தில் வாழும் பீலர்கள், வங்காளத்தில் காணப் படும் சாந்தலர்கள் முதலானேர் அவர்களைச் சேர்ந்த வர்களே.

இந்த நாகரிகமற்ற ஜாதியாருக்குப் பிறகு நம் நாட்டில் வசித்தோர் திராவிடர்கள் எனப்படுவர். திராவிடர்கள் இந்தியாவிலேயே பிறந்த மக்கள் என்றும், நாளடைவில் நாகரிக வளர்ச்சி ஏற்பட்டுத் தங்களைத் திராவிடர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் வடமேற்கு, வடகிழக்குக் கணவாய்கள் மூலம் அவர்கள் இந்தியாவுக்கு வந்தவர்கள் என்று அபிப்பிராயப்படுகின்றனர். இந்தியாவுக்குத் தெற்கிலும்,மேற்கிலும் வெகு காலத்துக்கு முன் இருந்த நிலப் பாகங்களிலிருந்து திராவிடர்கள் இந்தியாவில் குடியேறி இமயமலை வரையில் பரவினார்கள் என்பது மற்றும் சிலரின் கருத்து. எது உண்மையாயினும் அநேக ஆயிர வருஷங்களாகத் திராவிடர்கள் இந்தியாவில் வசித்து வருகிறார்கள் என்பது யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமாகும்.

திராவிடர்கள் மிகுந்த நாகரிகம் வாய்ந்தவர்கள். சிந்து, பஞ்சாப்மாகாணங்களில் சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பூமிக்குள் புதைந்து கிடந்த பழைய கட்டிடங்களால் திராவிடர்கள் ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்னரே நாகரிக வளர்ச்சி அடைந்து சிறந்து விளங்கினார்கள் என்பது சிலருடைய அபிப்பிராயம்.

திராவிடர்களின் நாகரிகம்: திராவிடர்கள் கிராமங்களிலும், பட்டணங்களிலும் வசித்தார்கள். உழவுத் தொழிலும், நெசவு, மண் பாண்டம் செய்தல் முதலியனவும் அவர்களுக்குத் தெரிந்திருந்தன. தங்கம், வெள்ளி,

செம்பு முதலிய உலோகங்களின் உபயோகங்களும் அவர்களுக்குத் தெரியும். யுத்தம் செய்வதிலும், வேட்டையாடுவதிலும் அவர்கள் திறமை வாய்ந்தவர்கள். கப்பல்கள், படகுகள் கட்டவும் அவர்கள் கற்றிருந்தார்கள். அவைகள் மூலம் வெளி நாடுகளுடன் அவர்கள் வியாபாரம் செய்து வந்தனர்.

பூர்வீகத் திராவிடர்களின் வீடுகள்

காற்று, மழை, பேய், பிசாசு, மரம், பாம்பு முதலியன அவர்களுடைய தெய்வங்களாகும். அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலி கொடுப்பது வழக்கம். அவர்களுக்குள் ஜாதி வித்தியாசம் கிடையாது.

திராவிடர்கள் பேசி வந்த பாஷை திராவிடம் எனப்படும். தற்காலத்தில் வழங்கும் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் திராவிடபாஷையிலிருந்து தோன்றியவைகளே.

கேள்விகள்

1. இந்தியாவின் பூர்வீகக் குடிகளின் வாழ்க்கையைப் பற்றிச் சில வரிகள் எழுது.

2. திராவிடர்களின் வருகையைப் பற்றி என்னென்ன அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன?

3. திராவிடர்களின் நாகரிகத்தை அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து எவ்வாறு அறியலாம்?

---

2. ஆரியர்கள் - வேதகாலம்

திராவிடர்கள் குடியேறிய வெகு காலத்துக்குப் பிறகு ஆரியர்கள் என்னும் ஜாதியார் வடமேற்குக் கணவாய்கள் வழியாக இந்தியாவுக்கு வந்தனர். இவர்களுடைய பூர்வீக வாசஸ்தானம் மத்திய ஆசியா. ஆடு மாடுகளை மேய்ப்பதும், பயிர்த்தொழில் செய்வதும் இவர்களுடைய முக்கிய வேலைகளாகும். மத்திய ஆசியா மழையற்ற வறண்ட பிரதேசமாதலாலும், குளிர் காலத்தில் குளிர் மிகுதியால் பயிர், பச்சைகள் வளராதாகையாலும் உஷ்ணமும், மழையும் இருக்கக் கூடிய வேறு இடங்களைத் தேடி அவர்கள் கூட்டம் கூட்டமாகப் புறப்பட்டனர். ஒரு பிரிவினர் மேற்கு முகமாக ஐரோப்பாக் கண்டத்திற்குச் சென்றனர். வேறு சிலர் பாரசீகத்தில் போய்க் குடியேறினர். மூன்றுவது பிரிவினர் தென்கிழக்காக வந்து கைபர் கணவாய் மூலமாக இந்தியாவினுட் புகுந்தனர்.

இந்தியாவுக்கு வந்த ஆரியர்களுக்கு இந்து-ஆரியர்கள் எனப் பெயர். இவர்கள் சிந்து நதி தீரம் செழிப்பாயிருந்ததாலும், அங்கு மேய்ச்சல் நிலம் அதிகம் காணப்பட்டதாலும் அங்கேயே தங்கினர்கள்.

ஆரியர்களின் நாகரிகம்: ஆரியர்கள் அழகிய உருவமும், கம்பீரமான தோற்றமும் உடையவர்கள். பல விதத் தொழில்களை அவர்கள் அறிந்திருந்தனர். ஆடு மாடு மேய்த்தல், பயிர்த்தொழில் முதலியவைகளோடு நெசவுத் தொழிலும் அவர்களுக்குத் தெரியும். போர்த் தொழிலிலும், வேட்டையாடுவதிலும் அவர்கள் மிகத் தேர்ச்சி பெற்றவர்கள். சிந்து நதி தீரத்தில் அவர்கள் குடியேறிய பொழுது அங்கு வசித்து வந்த திராவிடர்களுடன் சண்டைபோட வேண்டியதாயிற்று. அதற்கு வேண்டிய கத்தி, வாள் முதலிய ஆயுதங்களையும், இன்னும் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கலப்பை, அரிவாள் முதலியவற்றையும் அவர்களே செய்து கொண்டார்கள். உலோகங்களின் உபயோகம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

உணவு: ஆரியர்கள் கோதுமை, நெல் முதலியவற்றை உணவுப் பொருள்களாகக் கொண்டார்கள். பால், தயிர், நெய், காய், கறி முதலியவற்றையும் அவர்கள் சாப்பிடுவது உண்டு. சோமபானம் என்று சொல்லப்பட்ட ஒருவகை மதுபானத்தில் அவர்களுக்குப் பிரியம் அதிகம். சில வேளைகளில் அவர்கள் மாமிசம் சாப்பிடுவதும் உண்டு.

தெய்வங்கள்: இயற்கைப் பொருள்களையே ஆரியர்கள் தெய்வங்களாக வணங்கினர். சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன் முதலியவை அவர்கள் வணங்கிய முக்கிய தேவதைகள். இத்தெய்வங்களைக் குறித்து

அவர்கள் யாகங்கள் செய்வது வழக்கம். குளிர், அசுத்தம் முதலியவற்றைப் போக்கக் கூடியது அக்கினி ஆகையால் அதையே முதல் தெய்வமாக மதித்து மற்ற தேவதைகளுக்கு இடும் பலிகளை அக்கினி மூலமாகவே கொடுத்து வந்தனர்.

வேதங்கள்: ஆரியர்கள் சிந்து நதி தீரத்தில் வசித்த பொழுது தங்கள் தெய்வங்களைக் குறித்துப் பல துதிப் பாசுரங்கள் இயற்றினார்கள். இவற்றின் தொகுதியே வேதமெனப்படும். ஆதியில் ஏற்பட்டது ரிக்வேதம். இதில் ஆரியர்களின் மதக்கொள்கை, நாகரிகம், இயற்கை விநோதங்களிடத்தில் அவர்களுக்கு உண்டான ஆச்சரியம் முதலியன அடங்கியுள்ளன. பிறகு யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் ஆகிய இவைகள் ஏற்பட்டன. யாகம், பூஜைகள் முதலியன செய்யும் முறைகள் யஜுர் வேதத்திலும், இனிய பண்ணுடன் பாடும் துதிகள் சாம வேதத்திலும், பேய் ஓட்டுதல், விஷம், வியாதி முதலியவற்றை நீக்குதல் ஆகிய இவைகளுக்கு உரிய மந்திரங்கள் அதர்வண வேதத்திலும் அடங்கியுள்ளன. ஆரியர்கள் சிந்து நதி தீரத்தில் தங்கி வேதங்கள் இயற்றிய காலமே வேதகால மெனப்படும்.

ஆரியர்கள் பல குடும்பங்களாக வசித்தனர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் பிதாவே தலைவராவர். பிதாவுக்கு அடுத்தபடியாக மூத்த மகனுக்கு மரியாதை உண்டு. பல குடும்பங்கள் சேர்ந்த தொகுதி கிராமம்

என்றும், பல கிராமங்களின் சேர்க்கைக்கு வகுப்பு என்றும் பெயர்கள் ஏற்பட்டன. நாளடைவில் பல வகுப்புகள் சேர்ந்து சிறு இராஜ்யங்கள் ஆயின. கிராம சபைகள் கிராம ஆட்சியை நடத்தி வந்தன. ஒவ்வொரு வகுப்பையும் ஒரு தலைவன் ஒரு சிறு சேனையின் உதவியைக் கொண்டு பாதுகாத்து வந்தான். இத்தலைவர்கள் காலக்கிரமத்தில் சிறு இராஜ்யங்களுக்கு அரசரானார்கள். எனவே, வேதகாலத்தில் ஆரியர்கள் சிந்து நதி தீரத்தில் சிறு இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டு சுகமாக வாழ்ந்தனர் என்று தெரிகிறது.

ஆரியர்களால் துரத்தப்பட்ட திராவிடர்களில் பலர் தென் இந்தியாவில் குடியேறினர். சிலர் ஆரியர்களுக்கு அடங்கி அவர்களுடன் கலந்து போயினர். மலைகளிலும் காடுகளிலும் போய் ஒளிந்தவர்களும் சிலர் உண்டு.

கேள்விகள்

1. ஆரியர்கள் எங்கிருந்து வந்தார்கள்? ஏன்?

2. வேதங்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன? அவை ஒவ்வொன்றும் எதைப் பற்றிச் சொல்லுகின்றன?

3. ஆரியர்களின் உணவு, தெய்வ வணக்கம், வாழ்க்கை முதலியவற்றைப் பற்றிச் சில வரிகள் எழுது.

4. வேத கால நாகரிகம் என்பதென்ன?

3. பௌத்த மதம் பரவுதல்

ஆரியர்கள் சிந்து நதி தீரத்தில் வசித்து வந்த காலத்தில் அவர்களுடைய ஜனத்தொகை அதிகரித்தது. மேலும் மேலும் புதிய கூட்டத்தார் வந்து கொண்டிருந்தனர். ஆகவே, அவர்கள் சிறிது சிறிதாகக் கங்கைச் சமவெளியில் குடியேற ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் அவர்களுக்குள் தொழில் பிரிவினைகள் ஏற்பட்டன. வேதம் ஓதுவோரும், யாகம் முதலிய தெய்வ வழிபாடுகளைச் செய்வோரும் பிராமண ரென்றும், யுத்தம் செய்து நாட்டைக் காப்பவர்கள் க்ஷத்திரிய ரென்றும், விவசாயம், வியாபாரம் செய்வோர் வைசிய ரென்றும், இந்த மூன்று வகுப்பினர்க்கும் ஏவல் செய்பவர் சூத்திரர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இப்பிரிவினருக்குள் முதலில் வித்தியாசம் கிடையாது. ஆனால் நாளடைவில் வேற்றுமை ஏற்பட்டு உயர்வு தாழ்வுகளும் உண்டாயின.

பிராமணர்கள் தாம் வேதம் கற்கலாமென்றும், தேவ பூஜைகள் செய்யலாமென்றும் உண்டாயிற்று. அவர்களுக்குப் படிப்பு வளர்ச்சி ஏற்பட்டது. அவர்களே மோக்ஷமடையத் தக்கவர்களென்றும், மேலோர்களென்றும் அபிப்பிராயங்கள் தோன்றின. இந்த ஜாதி வித்தியாசங்களையும், யாகங்களின் பெயரால் நடந்த ஜீவவதைகளையும் அநேகர் வெறுத்தனர். இவற்றைப் போக்கக் கிளர்ச்சிகள் தோன்றின. இவற்றில் பௌத்தமத ஸ்தாபனம் ஒன்றாகும்.

கௌதமபுத்தரின் பிறப்பு: ஆரியர்களில் ஒரு வகுப்பினர் சாக்கியர் எனப்படுவர். இவர்களுடைய இராஜ்யம் இமயமலைச் சாரலில் ரோகிணி நதிக்கரையில் இருந்தது. அதன் தலை நகரம் கபிலவாஸ்து. சுமார் 2500 வருஷங்களுக்கு முன் சுத்தோதனர் என்னும் அரசர் அங்கு ஆண்டு வந்தார். அவருடைய மனைவியின் பெயர் மாயாதேவி. வெகுநாள் வரையில் இவர்களுக்குப் புத்திரப்பேறு இல்லை. ஒரு



புத்தர்

நாள் மாயாதேவி ஒரு கனவு கண்டாள். அக்கனவைச் சோதிடர் பலர் ஆராய்ந்து பார்த்து மாயாதேவிக்கு ஒரு ஆண் மகவு பிறக்குமென்றும், அக்குழந்தை ஒரு பெரிய அரசனாகவாவது அல்லது உலகம் போற்றும் ஞானியாகவாவது ஆவான் என்றும் கூறினார்கள். சில நாட்களுக்குப் பிறகு மாயாதேவி ஒரு ஆண் குழந்தையை ஈன்றாள். குழந்தை பிறந்த ஏழாம் நாள் மாயாதேவி மரண மடைந்தாள். சுத்தோதனர் அக்குழந்தைக்குச் சித்தார்த்தர், கௌதமர் என்ற பெயர்களை இட்டு அதை மிகவும் அருமையாக வளர்த்து வந்தார்.

இளமைப் பருவம்: சிறு வயதிலிருந்தே கௌதமர் மிகுந்த இரக்கமுள்ளவராக இருந்தார்; உயிர்ப் பிராணிகளிடத்தில் அன்பும், தயையும் கொண்டார்; வேட்டையாடுதலை வெறுத்தார். உலக இன்பங்களில் அவர் மனம் நாடவில்லை; அடிக்கடி கண்களை மூடிக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் இருப்பார்.

சுத்தோதனர் கவலை கொண்டார்; உலக இன்பங்களைத் தம் மகன் அனுபவிக்கவேண்டுமென்று கருதினார்; சிறு வயதிலேயே யசோதரை என்ற பெண்ணை அவருக்கு விவாகம் செய்வித்தார்; தவிர, உலக இன்பங்களை அனுபவிப்பதற்கு வேண்டிய சகல வசதிகளையும் கொண்ட ஒரு அரண்மனையைக் கட்டுவித்து அதில் கௌதமரும் அவரது மனைவியாரும் வசிக்கும்படி செய்தார். உலக வாழ்க்கைக்குரிய துன்பங்கள் எவையும் கௌதமர் கண்களில் படாமல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலக் கிரமத்தில் கௌதமருக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது.

நாட்டைவிட்டு ஏகுதல்: கௌதமரது மனம் உலக இன்பங்களில் ஈடுபடவில்லை. ஒரு சமயம் உலாவச் சென்றபொழுது உலகத்துன்பங்களாகிய பிணி, மூப்பு, சாவு முதலியவற்றை நேரில் கண்டார்; மனம் நொந்தார்; இவைகளைப் போக்கும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்; ஒரு நாள் இரவு தம் மனைவியையும், மகனையும் பிரிந்து ஒருவரும் அறியாமல் துறவி வேடம்பூண்டு அரண்மனையைவிட்டு வெளியேறினார்.

உண்மை புலப்படுதல்: கௌதமர் வைசாலி நகரையடைந்து பிராமணப் பண்டிதரிடம் வேதங்களை யும், சாஸ்திரங்களையும் கற்றார். அதனால் அவருக்கு மனச்சாந்தி உண்டாகவில்லை. பிறகு வனத்திற்குச் சென்று ஆறுவருடகாலம் கடுந்தவம் புரிந்தார். அத னாலும் தாம் நாடிவந்த உண்மை புலப்படவில்லை. பின் னர் கயை என்ற இடத்திற்கு அருகில் ஒரு அரசமரத் தடியில் அமர்ந்து அவர் தியானத்தில் இருந்தார். அப் பொழுது திடீரென்று அவருக்கு ஞானம் உதயமா யிற்று. புத்தி தெளிவடைந்தது. அதுமுதல் அவர் புத்தர் ஆனார்.

பௌத்தமதக் கொள்கைகள்: புத்தர் கண்டு பிடித்த மதத்துக்குப் பௌத்தமதம் எனவும், அவரைப் பின்பற்றியவர்களுக்குப் பௌத்தர்கள் எனவும் பெயர் கள் ஏற்பட்டன. அவர் கண்டுபிடித்த உண்மையின் முக்கிய அம்சங்கள்- துன்பங்களுக்குக் காரணம் ஆசை; ஆசையையொழித்தால் துன்பங்கள் நீங்கும்; பிற உயிர் களைத் தம் உயிர்போல நேசிக்கவேண்டும்; எப்பொழு தும் உண்மையே பேசவேண்டும்; பரிசுத்த மனதும், பரிசுத்தமான வாழ்வும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்; பிறவித் துன்பம் நீங்கி மோக்ஷம் அடைவதற்கு வேதம், யாகம், ஜாதிவேற்றுமை, கல்வி முதலியன அவசிய மாகா - என்பனவாம்.

பௌத்தமதம் பரவுதல்: புத்தர் ஊர் ஊராய்ச் சென்று தம் புதிய மதத்தைப் பரவச்செய்தார். அவ

ருடைய அழகான தோற்றமும், ஜாதி வேற்றுமை யின்மையும், ஜீவகாருண்யமும் பௌத்தமதம் விரைவில் பரவினதற்கு முக்கிய காரணங்களாகும். அக்காலத்தில் மகத நாட்டை ஆண்ட பிம்பிசாரர் என்னும் அரசர் புத்தரின் முக்கிய சீடர் ஆனர். பௌத்த மடங்கள் எங்கும் ஏற்பட்டுப் பௌத்த சன்னியாசிகள் அம்மதக் கொள்கைகளை எங்கும் பரப்பிவந்தனர்.

புத்தர் தமது 80-வது வயதில் காலகதி அடைந்தார். அவருக்குப்பின் அவருடைய சீடர்களும், பல அரசர்களும் பௌத்த மதத்தை இந்நாட்டிலும், பிற நாடுகளிலும் பரவச்செய்தார்கள். இக்காலத்திலும் பௌத்தமதம் சீன, ஜப்பான், திபேத், பர்மா, இலங்கை முதலிய நாடுகளில் வழங்கிவருகிறது.

கேள்விகள்

1. பௌத்த மதம் எவ்வாறு உண்டாயிற்று?
2. அம்மதத்தின் முக்கியக் கொள்கைகள் யாவை?
3. அம்மதம் ஏன், எவ்வாறு பரவிற்று?
4. புத்தரின் சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லு.

4. கிரேக்கர் படையெழுச்சியும், அதன் பலன்களும்

அலெக்ஸாண்டர் அரசராதல்: நமது நாட்டுக்கு வடமேற்கே உள்ள ஐரோப்பாக் கண்டத்தின் தென் பாகத்தில் கிரீஸ் என்னும் ஒரு தேசம் உண்டு. இந்தத் தேசம் ஆதிகாலம் முதற் கொண்டு நாகரிகமுடையது. இதன் வடக்கில் உள்ள மாசிடோனியா என்ற இராஜ்யத்தைப் பிலிப் என்னும் அரசர் சுமார் 2300 வருஷங்களுக்கு முன் ஆண்டுவந்தார். அவர் மிகப் பராக்கிரமசாலி. கிரீஸையும், சுற்றுப்புறத்திலுள்ள இதர நாடுகளையும் அவர் எளிதில் வென்றார். அவருக்குப் பின் அவருடைய குமாரர் அலெக்ஸாண்டர் பட்டம் பெற்றார்.

அலெக்ஸாண்டர்

அலெக்ஸாண்டரின் எண்ணமும், ஜயித்த நாடுகளும்: அலெக்ஸாண்டர் ஒப்பற்ற வீரர். உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் தம்முடைய பேரரசின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்னும் எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. ஒரு பெரிய சேனையைத் தயார் செய்து கொண்டு எகிப்து, சிறிய ஆசியா, பாரசீகம், ஆப்கா

னிஸ்தானம் முதலிய நாடுகளை வென்முர். பிறகு கி. மு. 327-ல் இந்தியாவின் வடமேற்கிலுள்ள கணவாய்களின் வழியாக இந்தியாவில் புகுந்து சிந்துநதி தீரத்தை அடைந்தார்.

ஜீலம்நதிச்சண்டை: அக்காலத்தில் பஞ்சாப் பிரதேசத்தில் பல சிறு இராஜ்யங்கள் இருந்தன. அவைகளுக்குள் ஒற்றுமை யில்லாமல், ஒன்ருெடொன்று சண்டையிட்டு வந்தன. ஆகவே, அலெக்ஸாண்டர் படை யெடுத்துவந்த பொழுது பஞ்சாபில் ஆண்ட சிற்றரசர்கள் ஒன்று சேர்ந்து அவரை எதிர்க்கவில்லை. மேற்குப் பஞ்சாப் நாட்டை ஆண்ட அம்பி என்னும் அரசர் அலெக்ஸாண்டருக்குக் கீழ்ப்படிந்து, இதர சிற்றரசுகளை ஜயிக்க அவருக்குப் படையும், பணமும் கொடுத்து உதவினர்.

ஜீலம் நதி சிந்து நதியின் ஒரு உபநதியாகும். அதன் கிழக்குப் பாகத்தில் உள்ள நாட்டைப் புருஷோத்தமர் என்ற அரசர் ஆண்டுவந்தார். அவர் மிகத்திறமை வாய்ந்தவர்; அலெக்ஸாண்டரை எதிர்க்கத் தீர்மானித்தார்; ஜீலம் நதியின் கீழ்க்கரையில் தம்முடைய சேனையுடன் வந்து தங்கினர். அப்பொழுது அந்நதியில் வெள்ளம் வந்து கொண்டிருந்தது. அலெக்ஸாண்டர் மேல் கரையை அடைந்தார். நதியைக் கடக்க வேண்டும்; யோசித்தார். நதியின் மத்தியில் ஒரு தீவு இருந்தது. அதன் உதவியால் எதிரிக்குத் தெரியாமல் ஓர் இரவில் அலெக்ஸாண்டர் அந்நதியைக் கடந்தார்.

மறுநாள் இரு கக்ஷியினரும் போர் தொடுத்தனர். புருஷோத்தமரின் யானைப் படையைக்கண்டு கிரேக்க வீரர்கள் அஞ்சினர். ஆயினும், அவர்கள் விடுத்த அம்புகள் யானைகளின்மீது தைக்கவே வேதனை பொறுக்கமாட்டாமல் அவை தங்கள் பக்கத்திலேயே நாசம் விளைக்க ஆரம்பித்தன. புருஷோத்தமர் வெகு திறமையுடன் போர் புரிந்தாராயினும் கடைசியில் தோல்வி அடைந்தார்; அவர் கைதியாக்கப்பட்டு அலெக்ஸாண்டர் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். அலெக்ஸாண்டர் அவரைப் பார்த்து, 'உம்மை நான் எவ்வாறு நடத்த வேண்டும்?' என்று கேட்டார். அதற்குப் புருஷோத்தமர் சிறிதும் பயமின்றிச் சற்றும் யோசியாமல், 'ஒரு அரசனை நடத்துவதுபோல் நடத்த வேண்டும்' என்றார். அவருடைய வீரத்தையும், தைரியத்தையும் கண்டு மகிழ்ச்சி அடைந்து அலெக்ஸாண்டர் அவருடைய இராஜ்யத்தை அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

பிறகு அலெக்ஸாண்டர் மேலும் கிழக்கே சென்று இன்னும் பல இந்திய இராஜ்யங்களை ஜயிக்க விரும்பினார். ஆனால் அவருடன் கூட வந்த வீரர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்ப வேண்டுமென்றார்கள். ஆகவே, அலெக்ஸாண்டர் மனதில்லாமலேயே திரும்ப வேண்டியதாயிற்று. போகும் வழியில் பாபிலோன் என்னுமிடத்தில் கி. மு. 323-ல் அவர் சுரநோய்கண்டு இறந்தார். அவருக்குப் பிறகு அவருடைய சேனைத்

தலைவர்கள் அவருடைய பெரிய இராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். இந்தியாவில் அவர் கைப் பற்றிய நாடுகள் செல்யூகஸ் நிகேடார் என்பவரின் ஆட்சியின் கீழ் வந்தன.

கிரேக்கப் படையெழுச்சியின் பலன்கள்: கிரேக் கப்படை யெழுச்சியினால் இந்தியாவுக்கு விசேஷப் பலன்கள் ஒன்றும் ஏற்படவில்லை. கிரேக்கர்களின் அரசியல் முறையையாவது அல்லது யுத்தமுறையையாவது இந்தியர் அறிந்து கொள்ளவில்லை. ஆயினும் அலெக்ஸாண்டருடன் வந்த சரித்திராசிரியர் மூலம் இந்தியாவைப்பற்றிய விவரங்கள் ஐரோப்பிய நாட்டினர்க்குத் தெரிய வந்தன. அதனால் ஏற்கனவே நடந்துவந்த இந்திய-ஐரோப்பிய வியாபாரம் மேன்மேலும் அதிகரிக்கலாயிற்று. கிரேக்க சிற்ப சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலியன இந்தியாவில் பரவலாயின. கிரேக்க அரசர்களில் சிலர் இந்தியாவில் வழங்கும் மதங்களைத் தழுவலாயினர். கிரேக்க அரசரும், இந்திய மன்னரும் பெண் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டனர்.

கேள்விகள்

1. அலெக்ஸாண்டர் எந்த நாட்டு அரசர்? அவருடைய எண்ணம் யாது?
2. அவர் ஜயித்த நாடுகள் எவை?
3. அவர் இந்தியாவின்மீது படை யெடுத்து வந்தபொழுது பஞ்சாபின் நிலைமை என்ன?
4. ஜீலம்நதிச் சண்டையைப் பற்றிச் சுருக்கி எழுது.
5. கிரேக்கர் படை யெழுச்சியின் பலன்கள் யாவை?

5. சந்திரகுப்த மௌரியரும், சாணக்கியரும்

சந்திரகுப்தரின் பூர்வ சரித்திரம்: கங்கைச் சம வெளியில் ஆரியர்கள் ஸ்தாபித்த இராஜ்யங்களில் மகத இராஜ்யம் ஒன்று. புத்தர் தம் மதத்தைப் பரவச்செய்த காலத்தில் பிம்பிசாரர் மகத இராஜ்யத்தை ஆண்டா ரென்று சொன்னோமல்லவா? பிம்பிசாரர் சைசுநாக வம்சத்தைச் சேர்ந்த அரசர். சைசுநாக வம்சத்தா ருக்குப் பிறகு நந்த வம்சத்தினர் மகத நாட்டை ஆண் டனர். சந்திரகுப்தர் என்பவர் நந்த வம்சத்தினருக்கு உறவினர்; மிகத் திறமை வாய்ந்தவர்; சிறந்த வீரர். அவரிடம் பொறாமை கொண்ட நந்த அரசர் அவரை நாட்டைவிட்டுத் துரத்தி விட்டார்.

சாணக்கியரும் சந்திரகுப்தரும்: சாணக்கியர் ஒரு ஏழைப் பிராமணர்; அதிக சாமர்த்தியசாலி; ராஜதந்திரி. ஒரு சமயம் இவர் நந்த அரசரின் அரண்மனைக்குப் போஜனம் அருந்தப்போயிருக்குங்கால் நந்த அரசர் இவரை அவமதித்தார். இதனால் கோபங்கொண்ட சாணக்கியர் நந்த வம்சத்தை அழிக்கத் தீர்மானித்தார்; சந்திரகுப்தருடன் நட்புக்கொண்டார். பல சூழ்ச்சி கள் செய்து பர்வதேசர் என்ற ஓர் அரசரைச் சந்திர குப்தருக்கு உதவி செய்யுமாறு அவர் வேண்டினர். பர்வதேசர் ஒரு பெரிய சேனையை அனுப்பினர். அச் சேனையின் உதவியைக்கொண்டு சந்திரகுப்தர் நந்த

அரசனைக்கொன்று மகத இராஜ்யத்தைக் கைப்பற்றினார். சந்திரகுப்தரின் தாயார் பெயர் முரா. ஆதலால் அவருக்குச் சந்திரகுப்த மௌரியர் என்றும், அவருடைய வம்சத்துக்கு மௌரிய வம்சம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

சாணக்கியர் சந்திரகுப்தருக்கு மந்திரியாயிருந்து அவரைப் பல வகையிலும் பாதுகாத்து வந்தார். சந்திரகுப்தரின் ஆட்சி சிறப்புற்றிருந்ததற்குச் சாணக்கியரே காரணமாவார். இவர் எழுதிய அர்த்த சாஸ்திரம் சந்திரகுப்தருக்காக எழுதப்பட்டதாகும். அதில் அரசரது கடமை, நியாயம் வழங்குதல், வரி வசூலித்தல் முதலியன தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அந்நூலிலிருந்து அக்காலத்து மௌரிய அரசியலைப்பற்றி நாம் அறியலாம்.

செல்யூகஸ் நிகேடாருடன் சண்டை: சந்திரகுப்தர் மகத இராஜ்யத்தைக் கைப்பற்றிய பிறகு, சிறிது சிறிதாக வட இந்தியாவிலுள்ள மற்ற நாடுகளையும் வென்று பேரரசு கொண்டார். இவரே இந்தியாவில் ஆண்ட முதல் சக்கரவர்த்தி எனலாம். அலெக்ஸாண்டரால் ஜயிக்கப்பட்ட பஞ்சாப் பிரதேசம் அவர் இறந்தபிறகு செல்யூகஸ் நிகேடாரின் ஆட்சியின் கீழ் வந்தது என்று படித்தீர்கள் அல்லவா? இப்பொழுது சந்திரகுப்தர் பஞ்சாபையும் வென்று தம் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். அதனால் கோபங்கொண்ட செல்யூகஸ் பெருஞ் சேனையுடன் வந்து

சந்திரகுப்தரை எதிர்த்தார். ஆனால் தோல்வியடைந்து அவர் சந்திரகுப்தருடன் சமாதானம் செய்து கொண்டார். இந்துகுஷ்மலை வரையிலுள்ள காபூல், காண்டஹார் முதலிய நாடுகளை அவர் சந்திரகுப்தருக்குக் கொடுத்துத் தம் மகளையும் அவருக்கு மணம் செய்வித்தார். அன்றியும், மெகஸ்தனிஸ் என்னும் கிரேக்க தூதரை அவர் சந்திரகுப்தரின் சமஸ்தானத்தில் இருக்கும்படி செய்தார்.

மெகஸ்தனிஸ் சுமார் 8 வருஷகாலம் சந்திரகுப்தரின் அரண்மனையில் தங்கியிருந்தார். சந்திரகுப்தரின் ஆட்சி முறை, ஜனங்களின் வாழ்க்கை முதலியவைகளைப்பற்றி இவர் ஒரு நூல் எழுதி வைத்திருக்கிறார். இதற்கு இண்டிகா என்று பெயர். இந்த நூல் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரத்தைப் போலவே அக்காலத்து இந்திய சரித்திரத்தை நாம் அறிந்துகொள்ள உதவுகிறது.

சந்திரகுப்தர் 25 வருஷ காலம் அரசு புரிந்து சுமார் கி. மு. 298-ல் காலமானார்.

கேள்விகள்

1. சந்திரகுப்தர் எவ்வாறு மகத தேசத்திற்கு அரசரானார்?

2. செல்யூகஸ் நிகேடார் யார்? அவர் ஏன் சந்திரகுப்தருடன் சண்டைக்கு வந்தார்? சண்டையின் முடிவென்ன?

3. சாணக்கியர், மெகஸ்தனிஸ் ஆகிய இவர்களைப் பற்றிச் சில வரிகள் எழுது.



அசோக இராஜ்யம்
காஷ்மீர்
யவனர்
கோசல்
வைசாலி
பாடலிபுத்திரம்
ராஜ்கிருகம்
உஜ்ஜயினி
சாஞ்சி
நர்மதா
கூர்ஜரம்
கோதாவரி
ஆந்திரநாடு
சித்தபுரம்
அராபிக்கடல்
வங்காளக்
குடாக்கடல்

6. மௌரிய சாம்ராஜ்யம்; ஆட்சிமுறை

சந்திரகுப்த மௌரியருக்குப் பிறகு அவருடைய குமாரர் பிந்து சாரநும், அவருக்குப் பிறகு அவருடைய புதல்வர் அசோகரும் மகத இராஜ்யத்தை ஆண்டனர். இவர்கள் காலத்தில் அந்த இராஜ்யம் விருத்தி யடைந்து அதிக உன்னத நிலையை அடைந்தது.

மௌரிய சாம்ராஜ்யத்தின் எல்லைகள்: அசோகர் காலத்தில் இந்தியாவின் பெரும்பாகம் மௌரிய இராஜ் யத்தில் அடங்கி யிருந்தது. வடக்கே இமயமலையும், தெற்கே தமிழ் நாடுகளும், கிழக்கே வங்காளக்குடாக் கடலும், மேற்கே அரபிக்கடலும் இதன் எல்லைகளாக உள்ளன. காபூல், காண்டஹார் முதலிய இடங்களும் இதில் அடங்கியுள்ளன.

மௌரிய ஆட்சிமுறை: மௌரிய சாம்ராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாகா ணங்கள் ஜில்லாக்களாகவும், ஜில்லாக்கள் தாலூகாக்க ளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தாலூக் காவிலும் பல கிராமங்கள் அடங்கியுள்ளன. மாகாண அதிகாரி கவர்னர் எனப்படுவார். அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களே அனேகமாய்க் கவர்னர்களாக நியமிக் கப் பட்டனர். கவர்னரிலிருந்து கிராம அதிகாரிவரை யில் படிப்படியாகப் பல உத்தியோகஸ்தர்கள் நியமிக் கப்பட்டனர். இவர்கள் தங்கள் வேலையை ஒழுங்காய்ச்

செய்கிருர்களா என்பதைக் கவனிக்க வேவுக்காரர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

அரசருக்கு ஆலோசனை சொல்ல மந்திரி சபை ஒன்று உண்டு. இதன் அங்கத்தினர்கள் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு இலாகாவை மேல் பார்வையிட்டு வந்தனர். அரசர்களே சர்வாதிகாரிகளாக இருந்த போதிலும் அவர்களால் பிரஜைகளுக்கு எவ்வித கஷ்டமும் ஏற்பட்டதில்லை.

அரசாங்கத்துக்கு முக்கிய வருமானம் நிலவரியே யாகும். இந்த வருமானத்தைக் கொண்டே அரசர்கள் அரண்மனைச் செலவு, இராணுவச் செலவு, பயிர்த் தொழிலுக்கு வேண்டிய வசதிகள் அளித்தல் முதலிய வற்றைச் செய்துவந்தனர். பஞ்சம் வந்த காலத்தில் அரசர்கள் ஜனங்களுக்கு வேலைகொடுத்தும், கூலி கொடுத்தும், இலவசமாக அன்னமளித்தும் உதவி புரிந்தார்கள்.

நகர பரிபாலனம் நகரச் சபையாராலும், கிராம பரிபாலனம் கிராமப் பஞ்சாயத்தாராலும் இக்காலத்தைப் போலவே அக்காலத்திலும் நடந்து வந்தன. 30 பேர்களடங்கிய ஒவ்வொரு நகர சபையும், ஐந்தைந்துபேர்களடங்கிய ஆறு சிறு சபைகளாகப் பிரிந்திருந்தது. அந்நகரத்தின் வியாபாரம், கைத்தொழில், வரிவசூல், ஜனனமரணக் கணக்கு முதலியவற்றைத் தனித்தனியே இச் சபைகள் கவனித்து வந்தன. கிரா

மப் பஞ்சாயத்தார் அரசாங்க உதவிபெற்றுப் பயிர்த் தொழிலுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துவந்தனர்.

மௌரிய மன்னர்களின் சேனை மிகவும் வலிமையுள்ளது; மிகப் பெரியது. அதில் தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நால் வகைப் படைகளும் அடங்கியுள்ளன. இப்படைகளைக் கவனிக்கத் தனிச் சபைகள் உண்டு. ஒரு கப்பற் படையும் அக்காலத்தில் இருந்தது.

மௌரிய சாம்ராஜ்யத்தின் இராஜதானியாகிய பாடலிபுரம் மிகவும் அழகுவாய்ந்தது. இதன் விஸ்தீர்ணம் சுமார் 15 மைல். இதைச் சுற்றிலும் ஒரு பலமான சுவரும், அதன் வெளிப்புறத்தில் ஒரு ஆழமான அகழியும் நகரப் பாதுகாப்புகளாக அமைந்துள்ளன. நகரின் நடுவே ஒரு அழகான நந்தவனத்தின் மத்தியில் அரசருடைய அரண்மனை அமைக்கப் பட்டிருந்தது. அரண்மனையின் தூண்களும், அங்கு வழங்கும் பாத்திரங்களும் பொன்னுல் செய்யப்பட்டவை. தங்கத்தினுல் செய்யப்பட்டு, நவரத்னங்கள் இழைக்கப்பட்ட ஒரு பல்லக்கில் அரசர் அடிக்கடி ஊர்வலம் வருவதுண்டு. அப்பொழுது அவர் அணிந்துள்ள ஆடை, ஆபரணங்கள் கண்களைக் கவரக்கூடியவை. அவைகளின் விலை மதிக்க முடியாது.

இந்தவித உன்னத நிலையில் சுமார் 100 வருஷ காலம் மௌரிய சாம்ராஜ்யம் நடந்து வந்தது. அசோகருக்குப் பிறகு அது சீர்குலைந்துவிட்டது.

கேள்விகள்

1. சந்திரகுப்த மௌரியருக்குப் பிறகு வந்த அரசர்கள் யார்?

2. அசோகர் காலத்தில் மௌரிய இராஜ்யத்தின் எல்லேகள் யாவை?

3. மௌரிய அரசியலைப் பற்றி எழுது.

4. மௌரியர் காலத்தில் நகரபரிபாலனம், கிராம பரிபாலனம் ஆகியவை எவ்வாறு நடந்தன?

5. மௌரியரின் படை, இராஜதானியின் சிறப்பு முதலியவைகளைப் பற்றிச் சில வரிகள் எழுது.

---

7. சில சாஸனங்கள்

அசோகர் : இவர் பட்டத்துக்கு வந்ததும் தம் இராஜ்யத்தைப் பெரிதாக்க எண்ணினர். இவர் முதலில் கலிங்கநாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதை வென்முர். அப் போரில் ஆயிரக் கணக்கான வீரர்கள் மாண்டனர். பலர் கைதி ஆயினர். போரின் முடிவில் கலிங்கநாடு நாசமடைந்து பிரஜைகளின் நிலே பரிதாபமாயிருந்தது. இவற்றையெல்லாம் கண்டார் அசோகர். அவர் மன நிலேயில் ஒரு மாறுதல் உண்டாயிற்று; போர் புரிவதை முற்றிலும் வெறுக்கலானர்; பொறுமை, சாந்தம், அன்பு முதலிய நற்குணங்களே மேற் கொண்டார். வேட்டையாடுதலேயும், மாமிசமுண்பதையும் நிறுத்தினர்.

பௌத்த மதத்தைத் தழுவுதலும், பரவச் செய்தலும்: அசோகருடைய மனத்திற்குப் பௌத்தமதம் திருப்தி

யை அளித்தது. அதனால் அவர் அம் மதத்தைத் தழுவலானார். அன்பு நெறியைக் கைக்கொண்டு அவர் இராஜ்யபாரத்தை நடத்தினார். பயத்தினால் பிரஜைகளை ஆளுவதிலும் சாந்தம், சமாதானம் இவைகளால் ஆட்சிபுரிவது மேலானதென அவர் கருதினார்; தர்ம வழியில் தம் பிரஜைகள் நடக்கவேண்டுமென்று அரும்பாடு பட்டார்; தர்ம மகாமாத்திரர் என்னும் மதபோதகர்களை நியமித்து அவர்களை ஊர்ஊராய் அனுப்பிக் குடிகளுக்கு நற்போதனைகள் செய்யுமாறு ஏற்பாடு செய்தார்; தாமும் பல பௌத்தமதப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்தார். பௌத்த சன்னியாசிகளை அயல் நாடுகளுக்கு அனுப்பி அங்கும் பௌத்தமதத்தை அவர் பரவச்செய்தார்.

அசோகரின் சாஸனங்கள் : பிரஜைகள் நல்ல வழியில் நடப்பதற்கு வேண்டிய நீதிகளையும், பௌத்த தர்மங்களையும் பொது இடங்களில் பாறைகளிலும், கல் தூண்களிலும் அசோகர் செதுக்கி வைத்தார். இவை அசோகரின் சாஸனங்கள் எனப்படும். இவற்றில் சிலவற்றை வடக்கே இமயமலைமுதல் தெற்கே மைசூர்வரையில் பற்பல இடங்களில் இன்றும் காணலாம்.

இச் சாஸனங்களில் காணப்படும் சில விஷயங்களை இங்கே கூறுவோம்.

1. தாய் தந்தையர், உபாத்தியாயர் முதலியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

2. பெரியோர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும்.

3. எல்லாப் பிராணிகளிடத்தும் அன்பா யிருக்கவேண்டும். வேலைக்காரர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும்.

4. ஒவ்வொருவரும் தம் தம் கடமைகளைத் தவ ருமல் சரிவரச் செய்யவேண்டும்.

5. பரிசுத்தமான மனத்துடனும், நல்லொழுக் கத்துடனும் வாழ வேண்டும்.

6. கெட்டவார்த்தைகள் பேசக்கூடாது.

7. வேறு மதங்களை நிந்திக்கக் கூடாது.

8. உலக ஆசையை ஒழித்துத் தர்ம நெறியில் நடக்கவேண்டும்.

இவ்வாருன சாஸனங்கள் முப்பது உள்ளதென்று சொல்லப்படுகிறது. இவைகளின் மூலம் அசோகரின் ஆட்சியைப் பற்றி நாம் நன்கு அறியக்கூடும்.

அசோகரின் நற்செய்கைகள் : தம்முடைய பிரஜை கள் சந்தோஷமாக வாழவேண்டுமென்று அசோகர் பல நன்மைகள் செய்தார். விவசாயத்திற்கு வேண்டிய ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் முதலியன வெட்டி வைத்தார். போக்குவரவுக்குரிய சாலைகளை அமைத்து அதன் இரு பக்கங்களிலும் பிரயாணிகளின் சௌகரி யத்திற்காக நிழல் தரும் மரங்களைப் பயிர் செய்தார். பல

சத்திரங்களையும், சாவடிகளையும் அவர் கட்டினார். மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் தனித்தனி வைத்திய சாலைகளை அவர் ஸ்தாபித்தார். குற்றஞ் செய்வோர்களை அவர் கடுமையாய்த் தண்டித்ததனால் அவர் காலத்தில் குற்றங்கள் குறைந்தன. ஜனங்கள் இன்புற்று அமைதியுடன் வாழ்ந்தனர்.

கேள்விகள்

1. அசோகர் பௌத்த மதத்தைத் தழுவக் காரண மென்ன?
2. அவர் அம்மதத்தை எவ்வாறு பரவச்செய்தார்?
3. அசோகரின் சாஸனங்கள் யாவை?
4. அவைகளில் கூறப்பட்டுள்ள விஷயங்களில் ஆறு சொல்லு.
5. அசோகர் பிரஜைகளுக்குச் செய்த நன்மைகள் என்ன?

---

8. பல்லவர்கள்

நாம் இதுவரையில் வட இந்தியாவில் தோன்றிய இராஜ்யங்களையும், அவைகளில் ஆண்ட அரச வம்சத்தார்களையும் பற்றிப் படித்தோம். அதே காலத்தில் விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள தக்ஷிண பீடபூமியிலும், அதற்குத் தெற்கிலுள்ள தமிழ் நாட்டிலும் பல இராஜ்யங்கள் தோன்றின. அவைகளில் ஒன்றாகிய பல்லவ இராஜ்யத்தைப் பற்றி இப்பொழுது படிப்போம்.

பல்லவர்கள் : பல்லவ இராஜ்யத்தை ஆண்டவர்கள் பல்லவர்கள் ஆவர். இவர்கள் யார் என்றும், எங்கிருந்து வந்தார்கள் என்றும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. இவர்கள் அன்னிய நாட்டாரென்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் தக்ஷிணத்தில் ஆண்டு வந்த ஆந்திரர்களின் கீழ் சிற்றரசர்களாயிருந்தவர்கள் இவர்கள் என்று அபிப்பிராயப்படுகின்றனர். இக்காலத்தில் தென்னிந்தியாவில் காணப்படும் கள்ளர், மறவர் முதலானோர் பல்லவர் வம்சத்தைச் சேர்ந்தவர்களென்று எண்ணப்படுகிறது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் பல்லவர்களின் இராஜ்யம் கிருஷ்ண நதி முதல் காவேரி நதிவரை வியாபித்திருந்தது. அவர்களுடைய தலை நகரம் காஞ்சீபுரம். கி. பி. ஆறும் நூற்றாண்டில் பல்லவர்கள் மிகப் பிரசித்தி பெற்றிருந்தனர். சிம்ம விஷ்ணு என்னும் பல்லவ அரசர் சோழர்களையும், பாண்டியர்களையும் ஜயித்து, இலங்கைத் தீவையும் கைப்பற்றிக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

மஹேந்திரவர்மர் (கி. பி. 600-630) : சிம்ம விஷ்ணுக்குப் பிறகு அவருடைய புதல்வரான மஹேந்திரவர்மர் பட்டத்துக்கு வந்தார். இவரும் மிகுந்த பராக்கிரமசாலி. இவர் சோழர்களை வென்று திருச்சிராப்பள்ளியைத் தமது இரண்டாவது இராஜதானியாக்கிக் கொண்டார். இவர் முதலில் ஜைன (சமண) மதத்தைத் தழுவியிருந்தார். ஆனால் பிறகு அப்பர் என்னும்

சிவனடியாரின் போதனையால் இவர் சைவமதத்தைத் தழுவலானார்; ஜைனர்களைத் தம் நாட்டிலிருந்து வெளியேற்றினார்; சிவன் கோவில்கள் பல கட்டினார். காஞ்சீபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவில் இவரால் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது. மேலும், திருச்சிராப்பள்ளி, பல்லாவரம் முதலிய இடங்களில் இவர் பல மலைக்கோவில்களைக் கட்டுவித்தார். அவற்றை நாம் இன்றும் காணலாம். அரக்கோணத்திற்குப் பக்கத்தில் உள்ள மஹேந்திரவாடி என்னும் ஊரும், அங்குள்ள குளங்களும் இவரால் ஏற்பட்டவை என்று சொல்லப்படுகிறது.

நரசிம்மவர்மர் (கி. பி. 630-668): மஹேந்திரவர்மருக்குப் பிறகு அவருடைய மைந்தர் நரசிம்மவர்மர் பட்டம் பெற்றார். இவரும் இந்து மதத்தைத் தழுவினார்; சிறந்த வீரர். இவருக்கு மகாமல்லர் என்னும் பட்டப்பெயர் வழங்கிவந்தது. இவரால் ஏற்படுத்தப்பட்ட துறைமுகப் பட்டினம் இவர் பெயரால் மாமல்லபுரம் என்று பெயர் பெறலாயிற்று. இதுவே இக்காலத்தில் மகாபலிபுரம் என்று வழங்கப்படுகிறது. அக்காலத்தில் மாமல்லபுரம் ஒரு சிறந்த துறைமுகமாயிருந்தது. நரசிம்மவர்மர் அங்குப் பல கோவில்களையும், கல்வெட்டுகளையும் அமைத்துள்ளார். கற்பாறைகளைக் குடைந்தும், செதுக்கியும் அவரால் கட்டப்பட்ட பல சிறிய கோவில்களை அங்கு இன்றும் காணலாம். அவைகளுக்குப் பாண்டவ ரதங்கள் எனப் பெயர்.

நரசிம்ம வர்மர் காலத்தில் ஹ்வான்ஸாங் என்னும் சீன யாத்திரீகர் இந்தியாவுக்கு வந்தார். அவர் காஞ்சீபுரத்தில் சில காலம் தங்கியிருந்தார். பல்லவ இராஜ்யத்தின் பெருமையையும், காஞ்சீபுரத்தின் சிறப்பையும் பற்றி அவர் பெரிதும் புகழ்ந்து எழுதியிருக்கிறார்.

நரசிம்மவர்மருக்குப் பிறகு சுமார் 200 வருஷ காலம் பல்லவ இராஜ்யம் நிலைத்திருந்தது. பின்னர் அது சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. பல்லவர்கள் தமிழரசர்களிடம் மந்திரி, சேனாதிபதி முதலான பெரிய உத்தியோகங்களில் அமர்ந்தனர். பல்லவர்கள் காலத்தில் சம்ஸ்கிருதமும், தமிழும் பெரிதும் போற்றப்பட்டு அபிவிருத்தி அடைந்தன.

கேள்விகள்

1. பல்லவர்களின் இராஜ்யம் எது? அதன் தலை நகர், துறைமுகப்பட்டினம் ஆகியவை எவை?

2. பல்லவ அரசர்களில் இருவரைச் சொல்லு அவர்கள் நாட்டுக்குச் செய்த நன்மைகள் என்ன?

3. ஹ்வான்ஸாங் யார்? அவர் செய்துள்ள காரியம் என்ன?

---

9. சோழர்கள்

நாம் வசிக்கும் இந்தியாவின் தென் பாகத்திற்குத் தமிழ் நாடு அல்லது தமிழகம் என்று பெயர். இது தெற்கே கன்னியா குமரியிலிருந்து, வடக்கே கிருஷ்ணா நதி வரையில் பரவியுள்ளது. இங்குப் பல வருஷங்க


தென்னிந்திய
இராஜ்யங்கள்
சேர நாடு
சோழ நாடு
பாண்டிய நாடு
தொண்டி
உறையூர்
காவேரிப்பூம்
பட்டிணம்
மதுரை
கொற்கை
அனுராதபுரம்

ளாகத் திராவிடர்கள் வசித்து வந்தனர். அவர்கள் நாகரிக வளர்ச்சி பெற்றவர்கள்; வியாபாரத்தில் திற மையுள்ளவர்கள்; கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள்; சிறந்த யுத்த வீரர்கள்.

முன்காலத்தில் தமிழகத்தில் மூன்று இராஜ்யங் கள் சிறந்து விளங்கின. அவைகள் சோழ இராஜ்யம், சேர இராஜ்யம், பாண்டிய இராஜ்யம் என்பனவாம். இப்பாடத்தில் சோழ ராஜ்யத்தைப் பற்றியும், சோழ மன்னர்களைப் பற்றியும் படிப்போம்.

தமிழ் நாட்டில் விளங்கியுள்ள மூன்று பெரிய இராஜ்யங்களுள் சோழ ராஜ்யமே மிகவும் வளப்பம் பொருந்தியது. 'சோழவள நாடு சோறுடைத்து' என்று ஒளவைப் பிராட்டியாரும் பாடியிருக்கிருர். இதற் குக் காரணம் அதில் பாயும் காவேரி நதியேயாகும். இக்காலத்தில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய ஜில்லாக்களே அக்காலத்தில் சோழநாடு என வழங்கப் பட்டது. முதலில் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்பனவும், பின்னுல் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், திருவாரூர் என்பனவும் இதன் தலைநகரங் களாக இருந்தன.

கரிகால் சோழர்: பண்டைச் சோழ அரசர்களில் முதன்மை பெற்றவர் கரிகால் சோழர். இவரது காலம் கி. பி. முதல் நூற்ருண்டு என்று சொல்லப் படுகிறது. இவர் பட்டத்துக்கு வந்தபொழுது இவ

ரது பகைவர்கள் இவரைக் கொல்ல எண்ணி இவர் தங்கியிருந்த இடத்தில் தீ வைத்தனர். இவர் அத் தீயை மிதித்துக்கொண்டு தப்பி வெளியேறினர். அதனல் இவரது கால்கள் கருப்பாயின. இக்காரணம் பற்றி இவர் கரிகால் சோழர் எனப் பெயர் பெற்ருர்.

கரிகாலர் மிக்கப் பராக்கிரமம் பொருந்தியவர். தம் விரோதிகளைக் கொன்று தென்னிந்தியா முழுவதும் தம் புகழை நிலைநாட்டினர். அவர் வட இந்தியாவிலும் படை யெடுத்துச் சென்று இமயமலையில் தம் கொடியை நாட்டிவிட்டுத் திரும்பினதாகச் சொல்லப்படுகிறது. இவர் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் தலைநகராயிற்று.

கரிகாலர் குடிகளுக்குப் பல நன்மைகள் செய்தார். காவேரி நதியின் ஜலம் கரைபுரண்டு வந்து ஜனங்களுக்குத் தீங்கிழையாவண்ணம் அதன் கரைகளை அவர் உயர்த்திக் கட்டினர். விவசாயம், வர்த்தகம் முதலியன விருத்தி அடைவதற்கான ஏற்பாடுகளை அவர் செய்தார்.

கரிகாலருக்குப் பிறகு சோழ நாடு வலிமை குன்றியது. பல்லவர்கள் அதன் ஆட்சியைக் கைக்கொண்டு சில நூற்ருண்டுகள் வரையில் ஆண்டுவந்தனர்.

இராஜராஜசோழர் (கி. பி. 985-1014): கி. பி. 10-ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் சோழர்கள் மீண்டும் பிரசித்தி பெற்றனர். மறுபடியும் அவர்கள் சோழ அர

சைக் கைக்கொண்டு புகழுடன் ஆளத் தொடங்கினர். இவர்களில் மிகச் சிறந்தவர் இராஜ ராஜ சோழர் என் பார். இவர் தஞ்சாவூரைத் தமது தலை நகரமாக்கிக் கொண்டார். இவரிடம் வலிமை பொருந்திய நிலப் படையும், கப்பற்படையும் இருந்தன. அவற்றின் உத வியைக் கொண்டு இவர் சேரமன்னரையும், பாண்டிய அரசரையும் வென்றார்; சாளுக்கியரையும், கலிங்கர்களை யும் ஜயித்தார். இலங்கைத் தீவும், லக்ஷத் தீவுகளும் இவருடைய ஆட்சிக்கு உட்பட்டன.

இராஜ ராஜ சோழர் பல புலவர்களையும், சிற்பிக ளையும் ஆதரித்தார். இவர் சிறந்த சிவ பக்தர். பல கோயில்களை இவர் கட்டினார். இவைகளுள் தஞ்சாவூரி லுள்ள பிரகதீஸ்வரர் கோயில் முதன்மையானது. இக் கோயிலின் கோபுரமும், கோயிலில் உள்ள லிங்கமும், கோயிலுக்கு முன்னால் உள்ள நந்தியும் சிறந்த வேலைப் பாடு உள்ளவை. இக் கோயிலின் சுவர்களில் இவர் தமது வெற்றிகளைப் பற்றியும், தான தர்மங்களைப் பற்றி யும், அரசாட்சி முறையைப் பற்றியும் செதுக்கி வைத்தி ருக்கிறார். இவர் கி. பி. 1014-ல் மரணமடைந்தார்.

இராஜேந்திர சோழர் (1014—1042): இராஜ ராஜ சோழருக்குப் பிறகு அவருடைய மைந்தர் இரா ஜேந்திர சோழர் பட்டம் பெற்றார். இவரும் தம் தந் தையைப் போல மிகுந்த பராக்கிரமசாலி. இவர் தென் பர்மாவையும், அந்தமான், நிகோபார் ஆகிய தீவுகளை யும் வென்றார். இவர் வட இந்தியாவின் மீது படை

யெடுத்துச் சென்று கங்கைப் பிரதேசங்களையும் ஜயித்தார். அதனால் இவருக்குக் கங்கை கண்ட சோழர் என்ற பெயர் ஏற்பட்டது. சோழர்களின் தலை நகரைத் தஞ்சையிலிருந்து மாற்றி, தற்காலம் திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள கங்கைகொண்ட சோழபுரம் என்ற ஊரை உண்டாக்கி அதை இவர் தலைநகரமாக்கிக் கொண்டார். தஞ்சைக் கோயிலை முழுவதும் பின்பற்றி இவர் அங்கு ஒரு கோயிலைக்கட்டி வைத்தார். இக் கோயிலிலுள்ள சிற்பங்கள் மிக்க அழகு வாய்ந்தவை. இவைகளும், சில வருஷங்களுக்குமுன் தஞ்சாவூர்க் கோயிலின் உட்புறத்தில் கண்டுபிடிக்கப் பட்ட அரிய ஓவியங்களும் திராவிடர்களின் நாகரிக வளர்ச்சியைத் தெரிவிக்கின்றன.

குலோத்துங்க சோழர்: கங்கை கொண்ட சோழருக்குப் பிறகு சோழநாட்டைச் சிறப்புடன் ஆட்சி புரிந்தவர் குலோத்துங்க சோழர் ஆவார். இவர் கங்கைகொண்ட சோழரது பெண் வயிற்றுப் பேரர். இவருடைய தகப்பனார் இராஜ ராஜ நரேந்திரர் வெங்கி நாட்டை ஆண்ட கீழ்ச்சாளுக்கிய அரசர். நரேந்திரருக்குப் பிறகு வெங்கி நாட்டுக்கும், பின்னர் சோழ நாட்டுக்கும் குலோத்துங்கர் அரசர் ஆனார்.

குலோத்துங்கர் காலத்தில் பிரஜைகள் சந்தோஷமாக வாழ்ந்தனர். இவர் கால்வாய்கள், அணைக்கட்டுகள் முதலியவற்றை அமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்ப

டுத்தி விவசாயத்தை நன்கு ஆதரித்தார். பஞ்சகாலத்தில் இவர் நாட்டில் ஏற்பட்டுள்ள வரிகளைக் குறைத்தார்.

குலோத்துங்கருக்குப் பிறகு ஆண்ட சோழ அரசர்கள் திறமையற்றவர்கள். ஆதலால் சோழநாடு சீர்குலையத் தலைப்பட்டுக் கடைசியில் முகம்மதியர் வசமாயிற்று.

சோழர்களின் ஆட்சியின் பெருமை: சோழர்களின் அரசாட்சி முறை வியக்கத்தக்கது. இவர்களுடைய இராஜ்யம் பல மாகாணங்களாகவும், ஜில்லாக்களாகவும் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டு வந்தது. கிராமங்களைக் கிராமச் சபைகளே ஆண்டுவந்தன. சோழர்கள் பல கோயில்களைக் கட்டினார்களென்று சொன்னோமல்லவா? அக் கோயில்களில் வேதங்களும், சாஸ்திரங்களும், மற்றுமுள்ள பல கலைகளும் மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பிக்கப்பட்டு வந்தன. அக்கோயில்களை அடுத்துள்ள சத்திரங்களில் துறவிகளுக்கும், ஏழைகளுக்கும் அன்னம், வஸ்திரம் முதலியன வழங்கப்பட்டன. தர்ம மருத்துவச் சாலைகளும் ஏற்பட்டிருந்தன. சோழர்கள் தமிழை ஆதரித்தனர். கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்கள் சோழர் சபையில் இருந்தவர்களே. மேலும் சோழர்கள் காலத்தில் உள்நாட்டு வியாபாரமும், வெளிநாட்டு வியாபாரமும் உன்னத நிலையில் இருந்தன.

கேள்விகள்.

1. கரிகால் சோழர் ஆண்ட காலம் எது? அவருக்கு ஏன் அப்பெயர் வந்தது? அவர் குடிகளுக்குச் செய்த நன்மைகளென்ன?

2. இராஜராஜ சோழரின் பராக்கிரமத்தை எதனுல் அறியலாம்? அவருடைய பெருமைக்குக் காரணமாயிருப்பது எது?

3. கங்கை கொண்ட சோழர் யார்? அப்பெயர் வரக்காரணமென்ன? அவரைப் பற்றிச் சில வரிகள் எழுது?

4- சோழர்களின் அரசாட்சிப் பெருமை, நாகரிகம் முதலியவைகளைப் பற்றி எழுது.

---

10. சேரர்கள்

சேர இராஜ்யத்தை ஆண்ட மன்னர்களுக்குச் சேரர்கள் எனப் பெயர். இப்பொழுது திருவாங்கூர், கொச்சி, மலையாளம் என்று சொல்லப்படும் நாடுகள் அக்காலத்தில் சேர இராஜ்யத்தில் அடங்கியிருந்தன. இதன் தலைநகர் வஞ்சி. தொண்டி, முசிரி என்பவை இதன் துறைமுகங்களாம்.

சேர அரசர்களில் சேரலாதர் மிகவும் கீர்த்திவாய்ந்தவர். இவருக்குக் குமாரர்கள் இருவர். மூத்தவர் சேங்குட்டுவர்; இளையவர் இளங்கோ. இவ்விருவரும் அரசகுமாரருக்குரிய கல்வி, வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளைப் பயின்று தேர்ச்சி பெற்றனர்.

ஒருநாள் இவர்கள் அரச சபையில் வீற்றிருந்தனர். அப்பொழுது அங்கு ஒரு ஜோதிடர் வந்தார்; அரச குமாரர்களைப் பார்த்தார்; 'அரச லக்ஷணங்கள்

இளங்கோவிடத்தில் நன்கு விளங்குகின்றன' என்றார் செங்குட்டுவனது முகம் வாடியது.

இளங்கோ அதைக் கண்ணுற்றார்; தமையனாரின் வாட்டத்தைப் போக்கத் தீர்மானித்தார். அவர் சரேலென்றெழுந்து, 'ஜோதிடரே, என்னிடம் அரச லக்ஷணங்கள் எதுவுமில்லை. ஆனால் துறவிக்குரிய லக்ஷணங்கள் பொருந்தியிருக்கின்றன. இன்று முதல் நான் துறவு பூண்டேன்' என்று யாவரும் பிரமிக்கும்படி கூறினார்.

தந்தையும், தாயும், தமையனாரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பயனில்லை. இளங்கோவின் மனம் மாறவில்லை. அன்றே அவர் துறவியானார். சிறுவர்களே, இவருடைய சகோதர அன்பைப் பார்த்தீர்களா?

சேரர் செங்குட்டுவர்: இவர் மிகவும் பராக்கிரமசாலி. வடநாட்டின்மீது படையெடுத்துச் சென்று தமிழரசர்களை இகழ்ந்த கனக விஜயர்கள் என்ற ஆரிய மன்னர்களைப் போரில் வென்றார். இமயமலையிலிருந்து கல் கொண்டுவந்து பத்தினிக் கடவுளான கண்ணகியின் சிலை செய்து ஒரு கோயிலும் கட்டினார். இவரது தம்பியும் சிறந்த தமிழ்ப் புலவருமான இளங்கோவடிகள் கண்ணகியின் சரித்திரத்தைக் கூறும் சிலப்பதிகாரம் என்னும் அரிய தமிழ்நூலை இயற்றினார்.

சேரர்களின் ஆட்சி : சேரர்கள் நீதி தவருது அரசு செலுத்தினர். அரசருக்கு உதவிபுரிய ஒரு மந்திரிசபை இருந்தது. மந்திரிகளே பொறுப்பாளிகளாக இருந்து அரசியலை நடத்திவந்தனர்.

சேரர்கள் கல்வியையும், கற்ருேரையும் ஆதரித்தனர். பலஜாதிகளையும், மதங்களையும் சேர்ந்த புலவர் பலர் எப்பொழுதும் அரசனைச் சூழ்ந்திருப்பார்கள். அரசன் அவர்களுக்கு ஏராளமான பரிசு அளிப்பதுண்டு. ஆடல், பாடல் முதலிய கலைகளும் சேரர்களால் நன்கு போற்றப்பட்டன.

சேரமன்னர்கள் வெளிநாட்டு வியாபாரத்தை மிகவும் பெருக்கினுர்கள். இவர்களுடைய நாடு மலைநாடானபடியால் இங்குள்ள மலைக் காடுகளில் கிடைக்கும் அகில், சந்தனம், ஏலம் முதலிய வாசனைப் பொருள்களுக்கும், யானைத் தந்தத்துக்கும் வெளிநாட்டார் இங்கு வந்து காத்திருப்பார்கள். தொண்டியிலும், முசிரியிலும் வியாபாரக் கப்பல்கள் அடிக்கடி கூடியிருப்பதுண்டு. இங்கிருந்து மிளகு, லவங்கம், ஏலம், மரம், தந்தம் முதலியன இத்தாலி, கிரீஸ், பாரசீகம், அரேபியா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இவைகளுக்குப் பதிலாகச் சேரநாட்டார் தங்கத்தையே பெற்று வந்தனர்.

இவ்வளவு சிறந்த சேரநாடு நாளடைவில் பெருமை குறைந்து அழிவுற்றது. ஆயினும் இப்போ

துள்ள திருவாங்கூர், கொச்சி ஆகிய இராஜ்யங்கள் பழைய சேரநாட்டின் பெருமைக்கு அடையாளமாக இருந்துவருவது மெச்சத்தக்கதாகும்.

கேள்விகள்

1. சேர இராஜ்யத்தில் அடங்கியுள்ள நாடுகள் எவை? அதன் தலை நகரையும், துறைமுகங்களையும் சொல்லு.

2. சேரர் செங்குட்டுவரின் பெருமையை விளக்கு.

3. சிலப்பதிகாரம் என்பது என்ன? யாரால் இயற்றப்பட்டது?

4. சேரநாட்டின் வெளிநாட்டு வியாபாரத்தைப் பற்றிச் சில வரிகள் எழுது.

---

11. பாண்டியர்கள்

தற்காலத்திய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களே முன்காலத்தில் பாண்டிய நாடாக இருந்தது. இதை ஆண்ட அரசர்களுக்குப் பாண்டியர் எனப் பெயர். இதன் தலைநகரம் மதுரை. கொற்கை என்பது இதன் துறைமுகமாகும்.

வைகை, தாமிரபரணி என்னும் நதிகள் பாய்வதால் பாண்டியநாடு வளம்பொருந்தியது. 'பாண்டிநாடு முத்துடைத்து' என்பதற்கு இணங்க அக்காலத்தில் இந்நாட்டை அடுத்துள்ள கடலில் முத்து எடுக்கப்பட்டது. இக்காலத்தும் இத்தொழில் இங்கு நடைபெறுகிறது.

தமிழ் அபிவிருத்தி : அக்காலத்தில் தமிழ் மொழி நாடெங்கும் பரவியிருந்தது. பாண்டியர்கள் மூன்று சங் கங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலமாய்த் தமிழை வளர்த்தார்கள்; பல துறைகளிலும் அதை மேன்மை அடையச் செய்தார்கள். சங்கப்புலவர்கள் இயற்றிய நூல்களாகிய தொல்காப்பியம், சிலப்பதிகாரம், ஜீவக சிந்தாமணி, மணிமேகலை, திருக்குறள் முதலியன தமிழ் நூல்களில் சிறந்து விளங்குகின்றன. இவைகளி லிருந்து தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, நாகரிகம் முதலியவற்றை நாம் அறியலாம்.

நெடுஞ் செழியர் : பாண்டிய மன்னர்கள் வீரமும், தைரியமும் பொருந்தியவர்கள்; சேரர்களையும், சோழர் களையும் தோற்கடித்தனர். நீதி தவறாது ஆட்சி புரிவ தில் அவர்கள் சிறந்தவர்கள். அவர்களில் முதன்மை பெற்றவர் நெடுஞ் செழியர். இவர் கி. பி. 620 முதல் கி. பி 650 வரையில் முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந் தார். சிறுவர்களே, கோவலன் சரித்திரத்தைக் கேட்டி ருக்கிறீர்களா? இல்லாவிட்டால் உங்கள் உபாத்தியாய ரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். தீர விசாரி யாமல், பொற்கொல்லன் பேச்சைக் கேட்டுக் கோவல னைக் கொலை புரிந்தவர் இப்பாண்டியரான நெடுஞ் செழி யரே. பின்னர் உண்மை புலப்பட்டதன் பேரில் தாம் செய்த குற்றத்தை உணர்ந்து மனம் பொறுமல் அவர் உயிர் நீத்தாரென்று சொல்லப்படுகிறது. பாண்டிய ரின் ஆட்சியின் நேர்மையைப் பார்த்தீர்களா?

நெடுஞ் செழியர் மிகத் திறமை வாய்ந்தவர். இவர் சேரரைத் தோற்கடித்துக் கைது செய்ததாகச் சொல்லப்படுகிறது. சோழரை இவர் வென்று திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய இடங்களைத் தம் வசப் படுத்திக் கொண்டார்.

நெடுமாறர் : இவர் நெடுஞ் செழியருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தார். இவர் சோழரைப் பலதடவைகள் தோற்கடித்தார். இவர் சாந்தமும், ஈகைக் குணமும் பொருந்தியவர். அக்காலத்தில் தென் இந்தியாவில் சமண மதம் பரவியிருந்தது. நெடுமாறர் சமண மதத்தைத் தழுவினர். ஆனல் அவருடைய மனைவி மங்கையர்க்கரசி என்பார் சைவமதப் பற்றுடையவர். அவர் சைவ சமயாசாரியாரான திருஞான சம்பந்தர் உதவியால் மீண்டும் தம் கணவரைச் சைவராக்கினர்.

கி. பி. பத்தாம் நூற்றுண்டில் சோழர்கள் பாண்டிய நாட்டை ஜயித்துச் சிறிது காலம் அதை ஆண்டு வந்தனர். பிறகு பாண்டியர்கள் மீண்டும் பலமடைந்து சுவாதீனம் பெற்றுத் தங்கள் இராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். அவர்களில் சிறப்புற்றவர் ஜடாவர்மர் என்ற சுந்தரபாண்டியர். இவர் கி. பி. 1251-ல் சிம்மாசனம் ஏறினர். இவர் மிகப் பராக்கிரமசாலி. சேர அரசரையும், சோழ மன்னரையும் தோற்கடித்தார்; அவர்களுடைய இராஜ்யங்களின் சில பாகங்களையும் கைப்பற்றிக் கொண்டார். இவர் இலங்கைத் தீவையும் ஜயித்த

தாகத் தெரிகிறது. இவர் கி. பி. 1271-ல் மரணமடைந்தார்.

சுந்தரபாண்டியருக்குப் பிறகு பாண்டியரின் ஆதிக்கம் வரவரக் குறையலாயிற்று. கடைசியில் கி. பி. 1365ல் பாண்டிய இராஜ்யம் விஜயநகர மன்னர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அவர்களுடைய பிரதிநிதிகளான நாயக்க அரசர்கள் விஜயநகர மன்னருக்கு அடங்கி மதுரையைச் சிறப்புடன் ஆட்சி புரிந்தனர். பின்னர் விஜய நகர இராஜ்யம் வலிமை குன்றவே, மதுரை நாயக்க அரசர்கள் சுவாதீனமடைந்தனர். நாயக்க மன்னர்களுக்குப் பிறகு மதுரை முகம்மதியர் வசமாகிப் பின்னர் ஆங்கிலேயரால் கைப்பற்றப் பட்டது.

கேள்விகள்

1. பாண்டிய நாட்டில் அடங்கியுள்ள ஜில்லாக்கள் எவை? அந்நாட்டின் தலைநகரையும், துறைமுகத்தையும் சொல்லு.

2. நெடுஞ்செழியர், நெடுமாறர், சுந்தரபாண்டியர் முதலியவர்களைப்பற்றிக் குறிப்பு எழுது.

3. பாண்டியர்கள் தமிழ் மொழிக்குச் செய்த பேருதவி என்ன?

4. சங்க நூல்கள் மூன்று சொல்லு. அவைகளிலிருந்து நாம் அறியும் விஷயங்கள் யாவை?

12. சந்திரகுப்தர் (விக்ரமாதித்யர்)

முன் ஒரு பாடத்தில் வட இந்தியாவில் மகத நாட்டில் சிறப்புடன் ஆண்ட மௌரிய அரசர்களைப் பற்றிப் படித்தீர்களல்லவா ? மௌரிய இராஜ்யம் சீர் குலைந்த பின் சுமார் 500 வருஷங்கள் வரையில் வட இந்தியாவில் வேறு பெரிய இராஜ்யம் எதுவும் ஏற்பட வில்லை. பிறகு கி. பி. நான்காம் நூற்றுண்டின் ஆரம் பத்தில் ஸ்ரீ குப்தர் என்பவர் ஒரு இராஜ்யத்தை ஸ்தா பித்தார். அவருடைய சந்ததியாருக்குக் குப்த வம்சத்து அரசர்கள் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஸ்ரீ குப்தரின் பேரரான முதலாவது சந்திரகுப்தர் கி. பி. 320-ல் அரசராகிச் சுமார் பத்து வருஷ காலம் ஆட்சி புரிந்தார். அவருக்குப் பிறகு அவருடைய மைந்தரான சமுத்திரகுப்தர் பட்டம் பெற்றுர். இவர் மிகுந்த பராக்கிரமசாலி; மிகப் புகழுடன் சுமார் 45 வருஷ காலம் அரசு செலுத்தினுர். இவர் பல நாடுகளை ஜயித்துத் தம் இராஜ்யத்தின் பரப்பை அதி கப்படுத்தினுர். இவருடைய தலைநகரம் அயோத்தி.

இரண்டாம் சந்திரகுப்தர் (கி. பி. 375-413) : சமுத் திரகுப்தருக்குப் பிறகு அவருடைய புதல்வர் சந்திர குப்தர் இரண்டாம் சந்திரகுப்தர் என்ற பெயருடன் பட்டம் பெற்றுர். இவர் தம் தந்தையைப் போலவே வீரமும், தைரியமும் பொருந்தியவர்; அரசரானதும் தம் இராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தத் தீர்மானித்தார்.

சாகர்கள் என்ற அந்நிய நாட்டினர் வசமிருந்த மாளவம், கூர்ஜரம் முதலிய நாடுகளை வென்று தம் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். பராக்கிரமத்தில் சூரியனுக்குச் சமானமானவர் என்ற பொருள் படும்படியான விக்ரமாதித்யர் என்னும் பட்டப்பெயர் அவருக்கு ஏற்படலாயிற்று. அவருடைய தலை நகரம் உஜ்ஜெய்னி.

விக்ரமாதித்யர் சிறந்த கல்வியாளர்; பல புராணங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் எழுதிவைத்தார். இவர் காலத்தில் சம்ஸ்கிருதம் என்னும் வடமொழி மேன்மை அடைந்தது. இவர் சமஸ்தானத்தில் நவ ரத்னங்கள் என்று சொல்லப்பட்ட ஒன்பது சம்ஸ்கிருத கவிகள் இருந்தார்கள். அவர்களுள் காளிதாசர் முதன்மை பெற்றவர். அவர் பல நூல்களை இயற்றியுள்ளார். அவைகளில் சாகுந்தலம், ரகுவம்சம், குமார சம்பவம், மேகசந்தேசம் என்பவை முக்கியமானவை.

விக்ரமாதித்யர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். அவர் பல கோயில்களைக் கட்டினார். அவை மிக அழகாகவும், சித்திரம், சிற்பம் முதலிய கலைகளின் அரிய வேலைப்பாடுகள் அமைந்தனவாயும் உள்ளன. அவர் பிற மதத்தினரையும் ஆதரித்து அவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்தார்.

பாஹியன்: விக்ரமாதித்யர் காலத்தில் பாஹியன் என்ற பௌத்த சந்நியாசி சீன தேசத்திலிருந்து இந்தி

யாவுக்கு வந்தார். அவர் பௌத்த ஸ்தலங்களைத் தரிசிக்கவும், பௌத்த மத சம்பந்தமான நூல்களைச் சேகரிக்கவும் இங்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் சுமார் நான்கு வருஷ காலம் இந்தியாவில் தங்கியிருந்து தாம் அக்காலத்தில் கண்ட விஷயங்களை ஒரு புத்தகமாக எழுதியிருக்கிறார்.

'குப்த இராஜ்யம் செல்வம் நிறைந்திருந்தது. பிரஜைகள் இன்பமாய் அமைதியுடன் வாழ்ந்தனர். குற்றங்கள் செய்வோர் மிகக் குறைவு. அரசாட்சியும், ஜனவாழ்க்கையும் மிக்க நேர்மையாயிருந்தன. நாடெங்கும் தர்ம வைத்தியசாலைகளும், அன்ன சத்திரங்களும், சாவடிகளும் காணப்பட்டன' என்று பாஹியன் கூறியிருக்கிறார்.

கேள்விகள்

1. குப்த இராஜ்யம் யாரால் எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது?

2. அதைச் சிறப்புடன் ஆண்ட முதல் இரண்டு அரசர்கள் யார்? சமுத்திர குப்தரின் இராஜதானி எது?

3 இரண்டாம் சந்திர குப்தருக்கு விக்ரமாதித்யர் என்ற பெயர் ஏற்படக் காரணமென்ன? அவர் ஜயித்த நாடுகளைச் சொல்லு.

4. விக்ரமாதித்யரின் இராஜதானி எது? என அவர் அதை ஏற்படுத்திக் கொண்டார்?

5. விக்ரமாதித்யரின் மதம், கல்வித்திறமை முதலியவைகளைப் பற்றி எழுது.

6. காளிதாசர் இயற்றிய நான்கு நூல்களை சொல்லு.

7. பாஹியன் யார்? அவர் எதற்கு இந்தியாவுக்கு வந்தார்? அவர் எழுதியுள்ள புத்தகத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளும் விஷயங்கள் யாவை?

---

13. முகம்மதியரின் படையெழுச்சிகள்- கஜினி மஹ்மூது

இந்தியாவுக்கு மேற்கில் அரேபியா தேசம் இருக்கிறது. அதன் தலைநகரம் மெக்கா. கி. பி. 570-ல் முகம்மது நபி என்னும் பெரியார் அங்குத் தோன்றினர். அவர் சிறுவயது முதற்கொண்டே நற்குண, நற்செய்கைகள் பொருந்தியவர். அவர் அராபியரின் தீய குணங்களை ஒழித்து அவர்களை நல்வழிப் படுத்த எண்ணங் கொண்டார். இறைவன் அருள்பெற்று அவர் ஒரு புதிய மதத்தைக் கண்டுபிடித்து அதை ஜனங்களுக்குப் போதிக்கலானர். அவர் போதித்த புதிய மதத்துக்கு இஸ்லாம் என்றும், அதைப் பின்பற்றியவர்களுக்கு முகம்மதியர் அல்லது முஸ்லீம்கள் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. முகம்மதியரின் வேதப் புத்தகத்திற்குக் குரான் என்று பெயர்.

முகம்மது நபி காலத்திலேயே இஸ்லாம் மதம் அரேபியா முழுவதிலும் பரவிற்று. அவருக்குப் பிறகு அவருடைய சிஷ்யர்கள் அம் மதத்தைப் பாரசீகம், மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிலும் பரவச் செய்தார்கள்.

கஜினி மஹ்மூது : ஆப்கானிஸ்தானத்தில் இஸ்லாம் மதம் பரவினதும் அங்குப் பல இஸ்லாமிய இராஜ்யங்கள் தோன்றலாயின. அவற்றில் கஜினியைத் தலை நகராகக் கொண்டு ஏற்பட்ட இராஜ்யம் ஒன்று. அதை ஆண்டவர்கள் கஜினி வம்சத்தார்கள் எனப்படுவர். மஹ்மூது என்பவர் கஜினி வம்சத்து மூதலரசர். அவர் கி. பி. 998-ல் சிம்மாசனம் ஏறினர்.

மஹ்மூதின் படையெழுச்சிகள் : மஹ்மூது இஸ்லாம் மதப்பற்றுள்ளவர். அம் மதத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்ற ஆசை அவருக்கு மிகுந்திருந்தது. மேலும் பொருள் ஆசை அவருக்கு அதிகம் உண்டு. இந்தியாவின் செல்வத்தைப் பற்றி அவர் சிறு வயதிலேயே வியாபாரிகள் மூலம் அறிந்திருந்தார். எனவே, அவர் பட்டத்துக்கு வந்ததும் இந்தியாவின் மீது படையெடுக்கத் தலைப்பட்டார். அக்காலத்தில் வட இந்தியாவில் பல சிறு இராஜபுத்திர இராஜ்யங்கள் இருந்தன. இவற்றை ஆண்டுவந்த அரசர்கள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். எனவே, கஜினிக்குப் படையெடுத்து



கஜினி மஹ்மூது.

வருவது எளிதாயிற்று. அவர் இந்தியாவின்மீது பதினேழு முறை படையெடுத்து வந்து பல பெரிய நகரங்களையும், செல்வம் நிறைந்த கோயில்களையும் தாக்கி ஏராளமான பொன், வெள்ளிப் பாத்திரங்களுடனும், இரத்னாபரணங்களுடனும் தம் நாடு சென்றார். அவரால் தாக்கப்பட்ட இடங்களுள் நாகர் கோட்டை, கன்னேசி (கானேஜ்), சோமநாதபுரம் முக்கியமானவை.

மஹ்மூதின் குணாதிசயங்கள் : மஹ்மூது ஓர் ஒப்பற்ற வீரர்; ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்டவர்; ஆட்சி முறையில் தேர்ச்சி பெற்றவர். அவர் தாம் இந்தியாவிலிருந்து கொண்டுபோன பொருள்களை நல்ல காரியங்களுக்கு உபயோகித்தார்; பல மசூதிகளையும், அரண்மனைகளையும், நந்தவனங்களையும், நீர் ஊற்றுக்களையும் அமைத்து கஜினியை அழகுபெறச் செய்தார். அவர் ஒரு சிறந்த கல்விமான்; கல்வியையும், கற்றோரையும் ஆதரித்தார். பிரதௌசி என்னும் பாரசீகக் கவி அவருடைய சபையில் உள்ள பாவலர்களில் முக்கியமானவர். மஹ்மூது கஜினியில் ஒரு சர்வ கலாசாலையையும், ஒரு புத்தக சாலையையும் அமைத்தார்.

கேள்விகள்

1. இஸ்லாம் மதம் ஏற்பட்ட விதமென்ன? அம் மதம் எந்நாடுகளில் பரவிற்று ?

2. மஹ்மூது இந்தியாவின் மீது படையெடுத்துவரக் காரணமென்ன? அப் படையெழுச்சிகள் ஏன் எளிதாயின?

3. மஹ்மூதின் குணாதிசயங்களைச் சொல்லு.

14. முகம்மது கோரி

கஜினி மஹ்மூது இறந்த பிறகு அவருடைய வம்சத்தார் சுமார் 120 வருஷ காலம் வரை கஜினியில் ஆண்டு வந்தனர். ஆனால் இவர்கள் திறமையற்றவர்கள். கி. பி. 1150-ல் ஆப்கானிஸ்தானத்தில் கோர் என்னுமிடத்தில் அரசு செலுத்தி வந்த முகம்மதிய அரசர் கஜினியைக் கைப்பற்றி, அதைத் தமது இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரியலானார்.

முகம்மது கோரி: கோர் வம்சத்தரசர்களில் முதன்மை பெற்றவர் முகம்மது கோரி என்பவர். இவர் கஜினி மஹ்மூதைப் போலவே பொருளாசை மிகுந்தவர். இந்தியாவில் ஒரு முகம்மதிய இராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணமும் இவருக்கு உண்டு. இந்தியாவின் மீது படையெடுக்க இவர் காலங்கருதியிருந்தார்.

முகம்மது கோரி

பிருதிவி ராஜனும், ஜயசந்திரனும்: வட இந்தியாவில் ஆண்ட இராஜ புத்திர அரசர்கள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்று சென்ற பாடத்தில் படித்தீர்களல்லவா? முகம்மது கோரி காலத்தில்

டில்லி, ஆஜ்மீர் நாடுகளை பிருதிவி ராஜனும், கன்னோசியை ஜயசந்திரனும் ஆண்டு வந்தனர். வட இந்தியாவில் ஆண்ட அரசர்களில் இவர்களே பிரசித்தி பெற்றவர்கள்; நெருங்கிய உறவினர்கள்.

பிருதிவி ராஜனின் பராக்கிரமத்தையும், கீர்த்தியையும் கண்டு ஜயசந்திரர் பொறாமை கொண்டார். ஜயசந்திரருக்குச் சம்யுக்தை என்ற ஒரு அழகிய பெண் இருந்தாள். அவள் பிருதிவியை மணக்க விரும்பினாள். பிருதிவியும் அவள் மீது விருப்பங்கொண்டார். ஆனால் சம்யுக்தையின் சுயம்வரத்திற்கு ஜயசந்திரர் பிருதிவியை அழைக்கவில்லை. மேலும் அவரை அவமதிக்க எண்ணிப் பிருதிவியைப் போல ஒரு உருவம் செய்து அதைச் சுயம்வர மண்டபத்தின் வாயிலில் வைத்தார். மாலையைக் கையிலேந்திய சம்யுத்தை பிருதிவியைக் காணாமல் வாயிலில் வைக்கப்பட்டிருந்த அவருடைய உருவத்தின் கழுத்தில் அதைப் போட்டாள். அங்கு மறைவாயிருந்த பிருதிவி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சம்யுக்தையைத் தம் குதிரையின் மேல் ஏற்றிக் கொண்டு தம் ஊர் சென்று மணம் செய்து கொண்டார். ஜயசந்திரருக்குத் தம் மகளை மீட்க முடிய வில்லை. பிருதிவியிடம் அவருக்கு இருந்த பொறாமை அதிகரித்தது; கொடிய பகை கொண்டார். தனிமையாய்த் தம் பகையைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் ஆப்கானிஸ்தானத்தில் அரசு

செலுத்தி வந்த கோரியைத் தமக்கு உதவி புரியுமாறு ஜயசந்திரர் வேண்டினர்.

தரேய்ன் சண்டைகள்: முகம்மது கோரி எதிர் பார்த்திருந்த சமயம் வாய்த்தது. கி. பி. 1191-ல் அவர் தம் சேனையுடன் டில்லியை நோக்கி வந்தார். ஜயசந்திரர் தம் சேனையுடன் அவரோடு சேர்ந்து கொண்டார். பிருதிவி சற்றும் மனங்கலங்காமல் தம் வீரர்களுடன் அவர்களை எதிர்க்கத் தீர்மானித்தார். டில்லிக்குச் சுமார் 80 மைல் தூரத்தில் ஸ்தானேஸ்வரத்துக்கு அருகிலுள்ள தரேய்ன் என்னும் சமவெளியில் இருகக்ஷியினருக்கும் கடும்போர் நடந்தது. கோரி தோல்வியுற்ருர். பிருதிவியும், அவருடைய வீரர்களும் முகம்மதிய வீரர்களைச் சுமார் 40 மைல் தூரம் வரை பின் தொடர்ந்து துரத்தி அடித்தனர். கோரி வேகமாய்ச் சென்று கஜினியை அடைந்தார்.

முகம்மது கோரி ஊக்கமும், விடா முயற்சியும் கொண்டவர். தோல்வியுற்ற நாள் முதல் அவர் பட்ட துயரத்திற்கு அளவேயில்லை; ஊண், உறக்கம் பிடிக்காமல் பிருதிவியை ஜயிக்கப் பிரதிஞ்ஞை செய்து கொண்டார். அடுத்த வருஷம் 1,00,000 குதிரை வீரர்கள் அடங்கிய ஒரு பெருஞ் சேனையுடன் இந்தியாவுக்குள் நுழைந்தார். பிருதிவி 3,00,000 குதிரை வீரர்களுடனும், 3000 யானைகளுடனும் அவரை எதிர்க்கத் தயாரானர். முன் போலவே தரேய்ன் சமவெளியில் இரு கக்ஷியினருக்கும் போர் நடந்தது. கோரி வெற்றி

பெற்ருர். பிருதிவி யுத்தகளத்தில் மாண்டார். பிருதிவியினிடத்தில் பொருமைகொண்ட சில இராஜபுத்திர அரசர்கள் கோரியுடன் சேர்ந்து கொண்டதாலும், ஒரு வேலைக்காரன் வஞ்சனையாகக் கோரிக்கு உதவி புரிந்ததாலும் அவர் ஜயமடைந்தார் என்று சொல்லப் படுகிறது.

டில்லி, ஆஜ்மீர் நாடுகள் கோரி வசமாயின. மறு வருஷம் கோரி தம்மை வரவழைத்து உறவு கொண்டாடிய ஜயசந்திரரையும் வென்று அவருடைய நாட்டையும் கைப்பற்றிக்கொண்டார். பின்னர் அவர் காசியைத் தாக்கி அதைக் கொள்ளையடித்தார். அதன் பிறகு அவர் கஜினிக்குத் திரும்பிச் சென்ருர். அவருடைய அடிமையும், தளகர்த்தருமான குத்புதீன் அவரைப் பின்பற்றி வடஇந்தியாவிலுள்ள கூர்ஜரம், பீஹார் முதலிய பல இராஜ்யங்களை ஜயித்தார். கோரிக்கு மக்கள் இல்லை. ஆகவே, கி. பி. 1206-ல் அவர் இறந்தபொழுது குத்புதீன் அவருடைய இந்திய இராஜ்யத்தை ஆளத் தொடங்கினர். டில்லி அவருடைய இராஜதானி ஆயிற்று.

கேள்விகள்

1. முகம்மது கோரியின் நோக்கங்களென்ன?

2. வட இந்தியாவின் நிலைமை அவருடைய படையெழுச்சிக்கு எவ்வாறு அனுகூலமாயிருந்தது?

3. தரேய்ன் என்னுமிடத்தில் நடந்த இரண்டு சண்டைகளைப் பற்றிச் சில வரிகள் எழுது.

4. முகம்மதுகோரி எவ்வாறு இந்தியாவில் முகம்மதிய இராஜ்யத்தை ஸ்தாபித்தார்? இந்தியாவில் ஆண்ட முதல் முகம்மதிய அரசர் யார்?

---

15. மூன்று மதாச்சாரியர்கள்

முன் ஒரு பாடத்தில் இந்து மதத்திற்குப் போட்டியாக வடஇந்தியாவில் தோன்றிய பௌத்த மதம் நாடெங்கும் பரவிற்றென்று சொன்னோம். அதே காலத்தில் ஜைன மதம் (சமண மதம்) என்ற மற்றொரு மதமும் தோன்றி எங்கும் பரவலாயிற்று. அதனால் இந்து மதம் தாழ்வடைந்தது. இந்து மதத்தின் பெருமையை நிலைநாட்டவும், பௌத்த சமண மதங்களைக் கண்டிக்கவும் சில சமயாச்சாரியர்கள் தோன்றினார்கள். அவர்களில் ஸ்ரீசங்கராச்சாரியர், ஸ்ரீஇராமானுஜாச்சாரியர், ஸ்ரீமத்வாச்சாரியர் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள்.

ஸ்ரீசங்கராச்சாரியர்: இவர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் மலையாளம் ஜில்லாவிலுள்ள காலடி என்னும் கிராமத்தில் ஒரு நம்பூத்ரிபிராமணர் குலத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே இவர் தம் தந்தையை இழந்தார்; தமது பதினாறுவது வயதிற்குள் சம்ஸ்கிருத பாஷையில் தேர்ச்சி பெற்று வேதம் முதலான சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தார். பிறகு தம் தாயின் உத்தரவின் பேரில் துறவியாகிக் காசிக்குச் சென்றார்; அங்கும் பல

பெரியோர்களிடம் சென்று இந்து மதத்தின் உட் கருத்துகளைக் கற்றறிந்தார்; பௌத்த சமண மத போத கர்களை வாதில் வென்றார்; பற்பல இடங்களுக்குச்



ஸ்ரீ சங்கராச்சாரியர்

சென்று இந்துமத உண்மைகளை ஜனங்களுக்குப் போதித்தார். இவருக்குப் பல சிஷ்யர்கள் ஏற்பட் டார்கள். காசி, காஞ்சி, பூரி, சிருங்கேரி ஆகிய இடங்களில் இவர் மடங்களை ஸ்தாபித்துத் தம் சிஷ்யர் கள் மூலம் தாம் அறிந்த உண்மைகளை ஜனங்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்தார்.

இவர் போதித்த மதம் அத்வைதம் எனப்படும். அதாவது ஜீவாத்மாவும், பரமாத்மாவும் வெவ்வே றில்லையென்றும், அவையிரண்டும் ஒன்றே என்றும், மனப் பூர்வமாய்ப் பரமாத்மாவைத் தியானித்துப்

பூஜை செய்வோர் இவ்வுண்மையை அறியக்கூடுமென்றும் இவர் போதித்தார். இவர் வழிபட்ட பிரதான தெய்வம் பரமசிவன். இவர் தம்முடைய மதக் கொள்கைக்கு இணங்க வேதம் முதலான நூல்களுக்கு உரை எழுதினர். வேதவியாசர் என்னும் முனிவர் எழுதிய பிரம்மசூத்ரம் என்னும் நூலுக்கு இவர் எழுதிய சங்கர பாஷ்யம் என்னும் உரை நூலே இவர் இயற்றிய நூல்களுள் சிறந்ததாகும். இவர் தமது 32-வது வயதில் காலமானர்.

ஸ்ரீ இராமானுஜாச்சாரியர் : இவர் கி. பி. பதினேராம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். சென்னைக்குச் சுமார் 25 மைல் மேற்கேயுள்ள ஸ்ரீபெரும்புதூர் என்னும் ஊரில் ஒரு பிராமண குலத்தில் இவர் பிறந்தார். இளம் பிராயத்திலேயே காஞ்சிபுரம் சென்று யாதவப் பிரகாசர் என்னும் குருவினிடத்தில் இவர் சகல சாஸ்திரங்களையும் கற்ருர். வெகு சீக்கிரத்தில் இவர் தம் குருவைவிடப் பல விதத்திலும் சிறந்து விளங்கியபடியால், குருவுக்கு இவரிடம் பொருமை உண்டாயிற்று. அதை அறிந்த இராமானுஜர் காஞ்சியை விட்டு ஸ்ரீரங்கம் சென்ருர். பிறகு திரும்

இராமானுஜாச்சாரியர்

பவும் இவர் காஞ்சீபுரம் வந்து திருமணம் புரிந்து சிறிது காலம் இல்லறம் நடத்தினர். பிறகு துறவியானர். ஸ்ரீரங்கத்திலிருந்த ஆளவந்தார் என்னும் சிறந்த ஆச்சாரியர் காலமான பின்பு இராமானுஜர் அங்கே சென்று அப் பதவியை அடைந்து வசித்துவந்தார்.

இராமானுஜர் ஆராதித்த கடவுள் மகாவிஷ்ணு. இவரைப் பின்பற்றியவர்கள் வைஷ்ணவர்கள். இவர் போதித்த மதம் விசிஷ்டாத்வைதம் எனப்படும். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றேயென்பதும், ஆனல் முக்தி அடைந்த ஜீவாத்மா பரமாத்மாவின் தன்மையைப் பெற்று அதனின்று வேறுபட்டுப் பரமாத்மாவுக்குத் தொண்டு புரிகிறது என்பதும் இவரது கொள்கை. ஸ்ரீ சங்கரரைப் போல் இவரும் பல கிரந்தங்கள் எழுதியிருக்கிருர். அவைகளில் பிரம்மசூத்ரத்திற்கு இவர் தம்முடைய கொள்கையை ஒட்டி எழுதியுள்ள இராமானுஜ பாஷ்யம் என்னும் உரை மிகச் சிறந்தது. இவரும் பல மடங்களை ஸ்தாபித்தார். அவைகளில் வானமாமலை, அஹோபிலம் ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டவை முக்கியமானவை. இவர் தமது 120-ம் ஆண்டில் காலகதி அடைந்தார்.

ஸ்ரீமத்வாச்சாரியர்: இவர் கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார். தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள உடுப்பி என்னும் ஊரில் இவர் தோன்றினர்; சிறு வயதிலேயே சகல கலைகளையும் கற்

றுத் துறவு பூண்டார். மற்ற ஆச்சாரியர்களைப் போலவே இவரும் ஊர் ஊராய்ச் சென்று ஜனங்களுக்கு மத போதனை செய்தார். இவர் போதித்த மதத்திற்கு த்வைதம் எனப்படும். ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறு என்றும், தியானத்தினாலும், பக்தியினாலும் ஜீவன் முக்தி பெறலாமென்றும், முக்திபெற்ற ஜீவன் பரமாத்மாவின் திருவடிகளை அடைந்து ஆண்டான், அடிமை என்ற சம்பந்தத்தில் இருக்குமென்றும் இவர் போதித்தார்.

மத்வாச்சாரியர்

இவரும் மற்ற மதாச்சாரியர்களைப் போலவே பற்பல இடங்களுக்குச் சென்று மதப் பிரசாரம் செய்தார்; பல மடங்களையும் ஏற்படுத்தினார். இவரும் தம் கொள்கையை ஒட்டிப் பிரம்ம சூத்ரத்திற்கு உரை எழுதியுள்ளார். இதற்கு மத்வபாஷ்யம் எனப் பெயர். ஸ்ரீராம பக்தரான ஹனுமாரிடத்தில் இவருக்குப் பற்று அதிகம்.

கேள்விகள்

1. மூன்று மதாச்சாரியர்கள் யார்? அவர்கள் வசித்து வந்த காலம் எது? அவர்கள் எங்கு அவதரித்தார்கள்?

ஸ்ரீ சங்கரர், இராமானுஜர்- இவர்கள் ஏற்படுத்திய மடங்கள் இப்பொழுது எங்குள்ளன?

3. மூன்று மதாச்சாரியர்களின் மதபோதனைகளின் முக்கிய அம்சங்களைச் சொல்லு.

16. விஜய நகர இராஜ்யம்

பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரை நதிக்கரையில் ஹம்பி என்னும் கிராமம் இருக்கிறது. இதனருகில் பாழடைந்துள்ள மதில்கள், கோயில்கள், அகழிகள் முதலியன இன்றும் காணப்படுகின்றன. இங்குதான் சுமார் 600 வருஷங்களுக்கு முன் விஜயநகரம் என்னும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

விஜயநகர இராஜ்ய ஸ்தாபனம்: வட இந்தியாவில் முகம்மது கோரி ஒரு முகம்மதிய இராஜ்யத்தை ஸ்தாபித்தாரென்றும், குத்புதீன் என்பவர் முதல் சுல்தானுக டில்லியில் அரசுசெலுத்தினுரென்றும் முன்பு படித்தீர்கள். குத்புதீனுக்குப் பிறகு பல சுல்தான்கள் டில்லியில் ஆட்சிபுரிந்தனர். அவர்களில் கி. பி. பதினுன்காம் நூற்ருண்டின் முற்பகுதியில் ஆண்ட முகம்மது துக்லக் ஒருவராவர். துங்கபத்திரை நதியின் வடகரையில் அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஆனகுந்தி கோட்டையின் அரசன் துக்லக்கினிடம் விரோதங்கொண்டான். துக்லக் தம் சேனையுடன் தக்ஷிணத்தில் பிரவேசித்து ஆனகுந்தியின் அரசனைத் துரத்தியடித்தார். பின்னர் அங்கு மந்திரி பதவியிலிருந்த ஹரிஹரரை அவர் அக்கோட்டையின் அதிபதியாக நியமித்து டில்லி திரும்பினுர்.

ஹரிஹரர் மிகுந்தபராக்கிரமசாலி. முகம்மதியரைத் தென் இந்தியாவுக்குள் வரவொட்டாமல் தடுக்

கவேண்டுமென்றும், இந்துமத தர்மத்தைப் பாது காக்க வேண்டுமென்றும் அவர் தீர்மானித்தார். அதற் காக அவர் துங்கபத்திரை நதியின் தென்கரையில் கி. பி. 1336-ல் தமது குருவான வித்யாரண்யரின் அரு ளால் ஒரு நகரத்தை ஸ்தாபித்தார். அந்நகரம் முதலில் வித்யாரண்ய நகரம் என வழங்கப்பட்டுப் பிறகு விஜய நகரம் எனப் பெயர் பெற்றது.

நகரத்தின் சிறப்பு: விஜய நகரம் அக்காலத்திய நகரங்களிலெல்லாம் சிறந்து விளங்கிற்று. இதன்



விஜய நகரக் கட்டிடம்

வடக்கில் துங்கபத்திரா நதியும், கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் மலைகளும் இதன் இயற்கைப் பாதுகாப்புகளாக அமைந்துள் ளன. இதன் விஸ்தீர்ணம் 120 சதுரமைல். நகரைச் சுற்றி ஏழு பலமான மதில்களும், மதில்களைச்சுற்றி ஆழமான அகழிகளும் இருந்தன. மதில்களுக்கு

இடையில் விசாலமான வீதிகளும், அழகான மாடமா ளிகைகளும், கூடகோபுரங்களும் காணப்பட்டன. நகரத்தின் மத்தியில் அரசருடைய அரண்மனை அழகிய நந்தவனத்தின் நடுவில் அமைந்துள்ளது. அந்நகரில் சிறந்து விளங்கிய பல ஆலயங்களில் விருபாக்ஷி ஸ்வாமி ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. நகரத்தின்கண் பல பழமரச் சோலைகளும், சிங்காரத் தோட்டங்களும் மிகுந்த வனப்புடன் சிறந்து விளங்கின. நகரத்தின் கடை வீதிகளில் விலை மதிக்க இயலாத பட்டாடைகளும், நவரத்னங்களும் எங்கும் குவிந்திருந்தன. நகரத்தைச் சுற்றிலும் ஏராளமான நன்செய், புன்செய் நிலங்களும், தோப்பும், துரவுகளும் காணப்பட்டன. துங்கபத்திரா நதியிலிருந்து வெட்டப்பட்ட கால்வாய்கள் அவைகளைச் செழிக்கச் செய்தன.

கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயர் (கி. பி. 1509-1530) : இவ்வாறு சிறந்து விளங்கிய இராஜ்யத்தை ஹரிஹரரும், அவருக்குப் பின் அவருடைய சகோதரரான புக்கராய

ரும் ஆண்டு வந்தார்கள். அவர்களுக்குப் பிறகு ஆண்ட அரசர்களில் கிருஷ்ணதேவராயர் மிகவும் புகழ் பெற்ற வர். இவர் வீரமும், தைரியமும் வாய்ந்தவர்; கம்பீர மான தோற்றமுடையவர். இவர் காலத்தில் விஜய நகர இராஜ்யம் தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்தது.

கிருஷ்ணதேவராயர் சிறந்த கல்விமான்; தெலுங்கு, சமஸ்கிருத பாஷைகளில் தேர்ச்சிபெற்றவர்; பல புல வர்களை ஆதரித்தார். அல்லசானி பெத்தன்ன என்பவர் இவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களில் முக்கிய மானவர்.

கிருஷ்ணதேவராயர் விஷ்ணுபக்தர்; ஆயினும் பிறமதத்தினரிடம் அன்பு பாராட்டினர். பல அழகிய கட்டிடங்களைக் கட்டி அவர் விஜயநகரத்தை அழகு பெறச்செய்தார். அவர் பிரஜைகளுக்குப் பல நன்மைகள் செய்தார். விவசாயம் அபிவிருத்தியடையும் பொருட்டு அநேக கால்வாய்களையும், ஏரிகளையும் அவர் வெட்டு வித்தார்.

கிருஷ்ணதேவராயருக்குப் பிறகு விஜயநகர இராஜ்யம் சீர்குலையத் தலைப்பட்டுக் கடைசியில் கி. பி. 1565-ல் முகம்மதியரால் அழிவுற்றது.

கேள்விகள்

1. விஜயநகர இராஜ்யம் ஏற்பட்ட விதமென்ன?
2. விஜயநகரத்தின் சிறப்பைப்பற்றி எழுது.
3. கிருஷ்ணதேவராயரைப் பற்றிச் சில வரிகள் எழுது.

---

17. இந்தியாவில் முகலாய ஆட்சியை ஏற்படுத்திய பாபர்

முகம்மதிய இராஜ்யம் வட இந்தியாவில் ஏற்பட்ட பிறகு டில்லியை இராஜதானியாகக் கொண்டு பல வம்சத்தார்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்களில் லோடி வம்சத்தார் கி. பி. 1451 முதல் 1526 வரை ஆண்டார்கள். லோடி வம்சத்துக் கடைசி அரசரான இப்ராஹிம் லோடி ஒரு கொடுங்கோலரசர். அவரைப் பிரபுக்களும், மற்ற ஜனங்களும் வெறுத்தார்கள்; எப்படியாவது அவரை நீக்க வேண்டுமென்று எண்ணினார்கள். அக்காலத்தில் ஆப்கானிஸ்தானத்தில் காபூலை இராஜதானியாகக் கொண்டு அரசு செலுத்திய பாபர் என்ற முகலாய மன்னரைத் தங்களுக்கு உதவி செய்யுமாறு அவர்கள் வேண்டினார்கள். பாபரும் அதற்கு உடன்பட்டார்.

பாபரது பூர்வ சரித்திரம்: பாபர் மத்திய ஆசியாவில் பர்க்கானு என்னும் நாட்டில் பிறந்தவர். அந்நாட்டின் அரசராகிய அவருடைய தகப்பனார் கி. பி. 1494-ல் இறக்கவே, பாபர் அதன் அரசரானார். அப்பொழுது அவருக்கு வயது பன்னிரண்டு. அவர் பட்டம் பெற்ற கொஞ்சக் காலத்துக்குள் அவருடைய விரோதிகள் பர்க்கானுவைக் கைப்பற்றிக்கொண்டு அவரைத் துரத்திவிட்டார்கள். அவர் ஊர் ஊராய்த் திரிய வேண்டியதாயிற்று.

தம் சொந்த நாட்டைக் கைப்பற்ற அவர் செய்த முயற்சிகள் பயன்படவில்லை. ஆயினும் அவர் சாமர் கண்ட் என்னும் நாட்டை ஜயித்து அதன் அரசரானார். ஆனால் அவருடைய பகைவர்கள் அங்கிருந்தும் அவரை விரட்டி விட்டனர். பின்னர் சுமார் பத்து வருஷ காலம் காடுகளிலும், மலைகளிலும் சில உற்ற நண்பர்களுடன் அவர் அலைந்து திரிந்தார்; சிறிதேனும் மனம் தளரவில்லை. பிறகு, காபூல் நாட்டைக் கைப்பற்றி அதை அவர் ஆளத்தொடங்கினார். மத்திய ஆசியாவில் ஒரு பெரிய இராஜ்யத்தை ஏற்படுத்த முடியா விட்டாலும், இந்தியாவின் மீது படையெடுத்துச் சென்று தம்முடைய ஆட்சியை அங்கு நிலை நாட்டலாமென்னும் எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. இதே சமயத்தில் இப்ராஹிம் லோடியின் பிரபுக்கள் அவரை இந்தியாவின் மீது படையெடுக்க வேண்டினர்.



பாபர்

முகலாய இராஜ்ய ஸ்தாபனம்: கி. பி. 1526-ல் பாபர் ஒரு பெருஞ் சேனையுடன் இந்தியாவுக்கு வந்தார். அவருக்கும் இப்ராஹிம் லோடிக்கும் பானிப்பட்டு என்னுமிடத்தில் போர் நிகழ்ந்தது. பாபரே வெற்றி பெற்றார். டில்லியும், ஆக்ராவும் அவர் கைவச

மாயின. ஆக்ராவை அவர் தம் இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரியலானுர். அவரே முகலாய வம் சத்து முதலரசர். கொஞ்சக் காலத்துக்குள் மாளவம், பீஹார், வங்காளம் முதலிய நாடுகளைக் கைப்பற்றி அவர் தம் இராஜ்யத்தை விஸ்தாரப் படுத்திக்கொண் டார்.

பாபரின் குணுதிசயங்கள்: பாபர் என்னும் பதத் திற்குச் சிங்கம் என்பது பொருள். அதற்குத் தக்க படியே அவரிடம் வீரமும், பலமும் பொருந்தி யிருந் தன. குதிரைச் சவாரி செய்வதிலும், நீந்துவதிலும் அவர் வெகு சமர்த்தர்; விடாமுயற்சி, கருணை, அன்பு முதலிய சிறந்த குணங்களும் அவரிடம் உண்டு. அவர் அரசாளும் திறமை வாய்ந்தவர். பாரசீக பாஷையில் அவருக்கு மிக்க தேர்ச்சி உண்டு. அவர் தமது வாழ்க் கையின் சரித்திரத்தைத் தாமே எழுதியிருக்கிருர்.

பாபரின் மரணம்: பாபர் நீண்ட காலம் அரசாள வில்லை; நான்கு ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். அவ ருடைய மைந்தரான ஹுமாயூன் நோயினுல் வருந்தி னுர். அப்பொழுது அவர் தமது புதல்வருடைய உயி ருக்குப் பதிலாகத் தம் உயிரை ஏற்றுக்கொள்ளும்படி கடவுளை வேண்டிக்கொண்டார். அவ்வாறே ஹுமா யூன் நாளடைவில் குணமடையவே பாபர் அதே நோய் கண்டு மரண மடைந்தார்.

கேள்விகள்.

1. பாபரின் பூர்வ சரித்திரத்தைப் பற்றிச் சொல்லு.

2. பானிப்பட்டுச் சண்டையின் காரணமென்ன? அதன் முடிவென்ன?

3. பாபரின் குணதிசயங்களைச் சொல்லு.

---

18. அக்பர்

பாபருக்குப் பிறகு அவருடைய புதல்வரான ஹுமாயூன் சிம்மாசனம் ஏறினார். ஆனால் அரசரான பத்து வருஷத்திற்கெல்லாம் அவர் நாட்டைவிட்டு ஓட நேர்ந்தது. ஆப்கானிய முகம்மதியரைச் சேர்ந்த ஷேர் ஷா என்பவர் அவரைத் துரத்தியடித்தார். ஹுமாயூன் தம் மனைவியுடன் பாலைவனங்களைக் கடந்து பாரசீகம் சென்றார். போகும் வழியில் அமரக் கோட்டை என்னுமிடத்தில் அக்பர் பிறந்தார். பின்னர் பாரசீக மன்னரின் உதவியைப் பெற்று ஹுமாயூன் மீண்டும் தாம் இழந்த இராஜ்யத்தைக் கைப்பற்றினார். ஆனால் சில மாதங்களுக்கெல்லாம் அவர் இறக்கவே, அக்பர் பட்டம் பெற்றார்.

பைராம்கான் ஆட்சி: ஹுமாயூன் இறக்கும் பொழுது அக்பருக்கு வயது பதின்மூன்று. அவர் சிறுவரா யிருந்தபடியால் அவருடைய அத்தை புருஷரான பைராம்கான் என்பவர் இராஜ்யகாரியங்களை நடத்திவந்தார். பைராம்கான் மிகத் திறமை வாய்ந்த

வர்; சிறந்த வீரர். ஹுமாயூன் இறந்ததும் மீண்டும் டில்லியைக் கைப்பற்ற எண்ணி ஆப்கானிய முகம்மதியர் ஹேமு என்னும் தலைவரின் கீழ் படையெடுத்தனர். கி. பி. 1556-ல் முன்பு பாபர் வெற்றிபெற்ற அதே பானிப்பட்டு என்னுமிடத்தில் பைராம்கான் ஹேமுவைச் சந்தித்துத் தோற்கடித்தார். முகலாய இராஜ்யம் நிலைபெற்றது. தமது 18-வது வயதில் அக்பர் அரசைத் தாமே ஏற்றுக்கொண்டு பைராம்கானை மெக்காவுக்கு யாத்திரை போகும்படி செய்தார். போகும் வழியில் பைராம்கான் ஒரு விரோதியால் கொல்லப்பட்டார்.

அக்பரின் இராஜ்யம்: அக்பர் பட்டம் ஏற்றபொழுது அவருடைய இராஜ்யம் மிகச் சிறியதாயிருந்தது. ஆனால் அவர் சிறிது சிறிதாகப் பல நாடுகளை ஜயித்துத் தமது இராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டார். அவர் ஜயித்த நாடுகளில் முக்கியமானவை வங்காளம், பீஹார், பீரார், ஆமத் நகரம், மீவார், காபூல் என்பனவாம். அவர் காலத்தில் முகலாய இராஜ்யம் வடக்கில் இமயமலை முதல், தெற்கில் கோதாவரி நதி வரையில் பரவியிருந்தது. இவ்வளவு பெரிய இராஜ்யத்தை அவர் மிகத் திறமையுடன் சுமார் 50 வருஷகாலம் ஆட்சி புரிந்தார்.

அக்பர்



அக்பரது இராஜ்யம்
காபூல்
பிஷாவார்
காஷ்மீர்
சிந்துநதி
பானிபட்டு
டில்லி
கன்னோசி
ஜான்பூர்
ஆக்ரா
அமர்கோட்டை
ஆஜ்மீர்
சித்தூர்
குவாலியர்
பக்ஸார்
காலஞ்சர்
ஹூக்ளி
குஜராத்
நர்மதாநதி
கான்தேசம்
அமதுநகரம்
பிடார்
கோல்கொண்டா
பிஜப்பூர்
காவேரி
பிரமபுத்திராநதி
அராபிக்கடல்
வங்காளக்
குடாக்கடல்

அக்பரும் இந்துக்களும் : முகலாய இராஜ்யம் இந்தியாவில் நிலைத்திருக்க வேண்டுமானால் இந்துக்களின் அன்பையும், ஆதரவையும் அடையவேண்டியது அவசியம் என்பதை அக்பர் கண்டுகொண்டார். அவரிடம் மத வேறுபாடு சிறிதும் கிடையாது. எல்லா மதங்களிலும் உண்மை உண்டு என்பது அவருடைய எண்ணம். எனவே, அவர் இந்துக்களையும், முகம்மதியர்களையும் ஒரே மாதிரி நடத்தினார்; இந்துக்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுத்தார். சில சமயங்களில் அவர் இந்துக்களைப்போல ஆடை ஆபரணங்கள் அணிவதும் உண்டு. மதவித்தியாசத்துக்காக இந்துக்கள் செலுத்தி வந்த ஜஸியா என்னும் வரியையும், ஸ்தல யாத்திரை வரியையும் அவர் நீக்கினார். இன்னும் இந்துக்களிடமிருந்த பால்யவிவாகம், உடன்கட்டை யேறுதல் முதலிய கொடிய வழக்கங்களை ஒழிக்க முயன்றதால் அவர் இந்துக்களின் நன்மதிப்பையும்,ஆதரவையும் பெற்றார்.

வட இந்தியாவில் இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த இராஜபுத்திரர்கள் என்னும் ஜாதியார் முகம்மது கோரியை எதிர்த்துச்சண்டை செய்ததை முன் ஒரு பாடத்தில் படித்தீர்கள். முகம்மதிய இராஜ்யம் இந்தியாவில் ஏற்பட்டதன்பேரில் இராஜபுத்திரர்கள் அந்நியருக்கு அடங்கியிருக்க இஷ்டப்படாமல் தற்காலம் இராஜபுதனம் என்று சொல்லப்படும் பிரதேசத்தில் போய் குடியேறினார்கள். அங்கு அவர்கள் பல தனி இராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு

ஆட்சி புரிந்தார்கள். அந்த இராஜ்யங்களில் மீவார் நாடு சிறப் புற்றது. அதன் தலைநகரம் சித்தூர். அக்பர் வட இந்தியாவில் ஜயித்த நாடுகளில் மீவாரும் ஒன்று என்று சொன்னோம். சித்தூரை முற்றுகையிட்டு அதை ஜயித்த பொழுது இராஜபுத்திரர்களின் வீரத்தையும், தைரியத்தையும், மன நிலையையும் அக்பர் அறிந்தார்; அவர்களுடைய நட்பைப் பெரிதும் கருதினார். இராஜ புத்திரப் பெண்களைத் தாமும், தம் மக்களும் மணந்து கொண்டும், அவர்களுக்கு உயர்ந்த பதவிகள் அளித்தும் அவர் இராஜபுத்திரர்களைத் தமக்கு உற்ற துணைவர்க ளாக்கிக் கொண்டார். ராஜா மான் சிங் என்ற இராஜபுத் திரர் அவருடைய சேனைத் தலைவராகவும், ராஜா தோடர்மால் என்பவர் அவரது பொக்கிஷ மந்திரியாக வும் ஆனார்கள்.

அக்பரின் ஆட்சி: அக்பர் தமது சாம்ராஜ்யத் தைப் பல மாகாணங்களாகவும், ஒவ்வொரு மாகாணத் தையும் பல ஜில்லாக்களாகவும் பிரித்து அரசியலை நடத் தினார். ஒவ்வொரு ஜில்லாவிலும் பல தாலூக்காக்கள் உண்டு. கிராமங்களைக் கிராம அதிகாரிகளும், கிராமச் சபையார்களும் பரிபாலித்து வந்தனர். பல நீதிஸ்த லங்களும் ஏற்படுத்தப்பட்டு, நல்ல நீதிபதிகளும் நிய மிக்கப்பட்டதால் அக்பரின் ஆட்சியில் பிரஜைகளுக் குத் தகுந்த நீதி கிடைத்தது. அக்பர் குடிகளிடமி ருந்து குறைந்த வரிகளே வாங்கினார். நிலங்கள் அளக் கப்பட்டு அவைகளின் தரத்துக்குத் தக்கபடி வரிகள்

விதிக்கப்பட்டன. பயிர்த் தொழிலும், கைத் தொழிலும் விருத்தி அடைந்தன. வியாபாரம் ஓங்கி வளர்ந்தது. நாட்டில் செல்வம் பொங்கிற்று. குடிகள் ஒருவிதக் குறைவுமின்றிச் சுகமாக வாழ்ந்தார்கள்; அக்பரைப் புகழ்ந்தார்கள். பேரரசர் என்னும் பட்டத்தை அவர் பெற்றார். கி. பி. 1605-ல் அவர் காலமானார்.

கேள்விகள்

1. பைராம்கான் யார்? அவர் அக்பருக்குச் செய்த உதவி என்ன?

2. அக்பர் ஜயித்த நாடுகளில் நான்கு சொல்லு.

3. அக்பர் இந்துக்களுக்குச் செய்த நன்மைகள் என்ன?

4. இராஜபுத்திரர்களிடம் அவர் எவ்வாறு நடந்து கொண்டார்?

5. அக்பரின் ஆட்சியைப் பற்றிச் சில வரிகள் எழுது.

---

19. ஔரங்கசீப்

அக்பருக்குப் பிறகு அவருடைய மைந்தரான ஜஹாங்கீரும், அவருக்குப் பின்னர் அவரது புதல்வரான ஷாஜஹானும் முறையே முகலாய இராஜ்யத்தை ஆண்டார்கள். பிறகு கி. பி. 1659-ல் ஔரங்கசீப் பட்டம் பெற்றார். இவர் ஷாஜஹானின் மூன்றாவது புதல்வர்.

ஔரங்கசீப்பின் குணாதிசயங்கள்: ஔரங்கசீப் மிக்க மனோதிடமும், பராக்கிரமமும் உடையவர்; சிறந்த தெய்வ பக்தி கொண்டவர்; இஸ்லாம் மதத்தில் விசேஷப் பற்று உடையவர். முகம்மதியரின் வேத புஸ்தகமாகிய குரானில் கூறியவாறு நடப்பதே தர்மமென அவர் கருதினார். ஆடம்பர வாழ்க்கையில் அவருக்கு விருப்பம் கிடையாது; தர்பாரில் வீற்றிருக்கும் காலம் தவிர மற்றைய காலங்களில் சாதாரண மனிதரைப்போல உடை தரிப்பார். ஆடல்பாடல்களை அவர் வெறுத்தார்; மதுபானத்தை முற்றிலும் அகற்றினார்.



ஔரங்கசீப்

குடிகளின் நன்மையே அவருடைய முக்கிய நோக்கம். அரசாங்க வருமானத்தைத் தம் சொந்தச் செலவுக்கு உபயோகிப்பது தவறென்று உணர்ந்து, இவர் தமக்கு வேண்டிய பணத்தைக் குல்லாய்கள் செய்து சம்பாதித்து வந்தார். அவர் சிறந்த கல்வி அறிவு பெற்றவர்; நல்ல இராஜதந்திரி; தம் கடமைகளைச் செய்வதில் சிறிதும் தவறாதவர்; அஞ்சாநெஞ்சம் படைத்தவர்; தாம் நினைத்த காரியத்தை எவ்விதத்திலும் நிறைவேற்றும் ஆற்றல் உடையவர்; நடுநிலைமை வாய்ந்தவர்; பிர

புக்களென்றும், ஏழைகளென்றும் வேற்றுமை பாராமல் யாவருக்கும் ஒரேமாதிரியான நீதி வழங்கினர்.

ஔரங்கசீபும் இந்துக்களும் : ஔரங்கசீப் இஸ்லாம் மதம் ஒன்றே உண்மையான மதமென்று நம்பினர். அதனல் அவருடைய ஆட்சியில் இந்துக்களுக்குச் சில கஷ்டங்கள் உண்டாயின. ஏற்கனவே உள்ள இந்து ஆலயங்களுக்கு அவர் கெடுதிசெய்யாவிடினும் புதிய கோயில்கள் கட்டக்கூடாதென்று அவர் உத்தரவிட்டார். மீறிக்கட்டப்பட்ட கோயில்களை அவர் இடித்துத் தகர்த்தார். ஆயினும் அவர் தம் முன்னேர்களை அனுசரித்து இந்துக்களுக்குத் தம் இராஜ்யத்தில் உயர்ந்த பதவிகள் அளித்தார். அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அநேக வரிகள் தம்முடைய மதத்திற்கு விரோதமாயிருந்தபடியால் அவர் அவைகளையெல்லாம் நீக்கினர். அதனல் அரசாங்க வருமானம் குறைந்தது. எனவே, இஸ்லாம் மதத்திற்குச் சம்மதமான ஜஸியா வரியை அவர் மீண்டும் விதித்தார். செலுத்துவோரின் சக்திக்குத் தக்கவாறு அவ்வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுவந்தது.

இராஜபுத்திரர்கள் மற்ற முகலாய மன்னர்களை எதிர்த்துப் போராடியதுபோல ஔரங்கசீபையும் எதிர்த்தனர். ஆனல் தோல்வியடைந்து அவர்களில் பலர் ஔரங்கசீபினிடம் வேலைக்கு அமர்ந்தனர். அவர்களுடைய உதவியைக் கொண்டே ஔரங்கசீப் தம் விரோதிகளை வென்றர்.

ஔரங்கசீபின் இராஜ்யம் : ஔரங்கசீப் பல நாடுகளை வென்று முகலாய இராஜ்யத்தைப் பெரிதாக்கினர். தக்ஷிணத்தின் மேற்கில் மகாராஷ்டிரர் என்னும் ஒரு ஜாதியார் தோன்றி முகலாய இராஜ்யத்தை அடிக்கடி தாக்கினர்கள். தக்ஷிணத்தில் பிஜப்பூர், கோல்கொண்டா நாடுகளை ஆண்டுவந்த சுல்தான்கள் அவர்களுக்கு உதவிபுரிந்தனர். ஆகவே, ஔரங்கசீப் படையெடுத்துச் சென்று அந்தச் சுல்தான்களைத் தோற்கடித்து அந் நாடுகளைத் தம் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். தெற்கில் சிறிதுபாகம் தவிர மீதியுள்ள இந்தியா முழுவதும் ஔரங்கசீபின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

ஔரங்கசீபின் கடைசிக்காலம் : ஔரங்கசீப் மகாராஷ்டிரரை அடக்க எவ்வளவோ முயன்றும் பயன் படவில்லை. அவர் தாமே தம்முடைய சேனைக்குத் தலைமை வகித்துச் சுமார் 15 வருஷகாலம் தக்ஷிணத்தில் தங்கியிருந்து மகாராஷ்டிரரை அழிக்க அரும்பாடு பட்டார். மகாராஷ்டிரர் நேர்முகமாக நின்று போர்புரியாமல் திடீரென்று தோன்றித் தாக்குவதும் மறைவதுமாயிருந்தபடியாலும், ஔரங்கசீபின் சேனைத் தலைவர்கள் தங்கள் கடமையை மறந்து சுயநலத்தைக் கருதியபடியாலும் ஔரங்கசீப் மகாராஷ்டிரரை ஜயிக்கமுடியாமல் போயிற்று. இதற்குள்ளாக அவருடைய புதல்வர்கள் அவருக்கு விரோதமாகக் கலகம் செய்தார்கள். மனம்நொந்து கி. பி. 1707-ல் அவர் மரணமடைந்தார்.

ஔரங்கசீபுக்குப் பிறகு வந்த அரசர்கள் திறமை யற்றவர்கள். ஆகவே, முகலாய இராஜ்யம் வரவர க்ஷீணிக்கலாயிற்று.

கேள்விகள்

1. ஔரங்கசீபின் குணாதிசயங்களைச் சொல்லு.
2. அவர் இந்துக்களை எவ்வாறு நடத்தினார்?
3. ஔரங்கசீப் ஏன் மகாராஷ்டிரரை அடக்க முடியவில்லை?
4. முகலாய இராஜ்யம் க்ஷீணிக்கக் காரணமென்ன?

---

20. இந்தியாவுக்கு வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள்

ஆதிகாலம் முதற்கொண்டு நம் நாட்டிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வியாபாரம் நடந்து வருகிறது. முன் ஒரு பாடத்தில் தமிழ் நாடுகளில் ஒன்றாகிய சேர நாட்டின் வியாபாரச் சரக்குகளுக்கு மேல் நாட்டார் வந்து அதன் துறைமுகங்களில் காத்திருந்தார்கள் என்று சொன்னோம். அதே மாதிரியாக இந்தியாவின் மேற்கில் உள்ள கூர்ஜரம், சூரத் முதலிய இடங்களிலுள்ள வியாபாரிகள் வடமேற்குக் கணவாய்கள் வழியாக மேல் நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தனர். வியாபாரச் சரக்குகள் அரபிக் கடல், செங்கடல், மத்தியதரைக் கடல் முதலியவைகளின் வழியாகவும், ஆப்கானிஸ்தானம், பாரசீகம், சிறிய ஆசியா முதலிய நாடு

கள் வழியாகவும் ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு போகப்பட்டு வந்தன.

ஆனால் இப்பாதைகளில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. தூரமும் அதிகம். அடிக்கடி கப்பல் களிலும், ஒட்டகங்களிலும் சாமான்களை ஏற்றுவதிலும், இறக்குவதிலும் பல கஷ்ட நஷ்டங்கள் உண்டாயின. கி. பி. 15-ம் நூற்றாண்டில் எகிப்து, பாரசீகம், மத்திய ஆசியா முதலிய நாடுகள் முகம்மதியர் வசமாகவே அவர்கள் ஐரோப்பியக் கிறிஸ்தவ வியாபாரிகளுக்குப் பல விதத்திலும் தீங்கிழைக்கலாயினர். எனவே, இப் பாதைகளும் தடைபட்டுப் போயின.

ஐரோப்பிய வர்த்தகர்கள் கடல் மார்க்கமாகவே இந்தியாவுக்கு வருவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்க முயன்றனர்.

போர்ச்சுகீசியர்: இவ்வாறு செய்யப்பட்ட முயற் சிகளில் போர்ச்சுகீசியர் வெற்றி பெற்றனர். வாஸ் கோட காமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமி கி. பி. 1497-ல் தம் நாடாகிய போர்ச்சுகலை விட்டுப் புறப் பட்டுக் கடல் வழியாக ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென் கோடியில் உள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இவர் முத லில் கி. பி. 1498-ல் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டையில் வந்து இறங்கினார். கள்ளிக் கோட்டையின் அரசர் காமாவிடம் அன்பு பாராட்டி

அவருக்கு வேண்டிய உதவி அளித்தார். போர்ச்சுகீசியருக்கு இந்தியாவுடன் வியாபாரம் செய்ய அனுமதி கிடைத்தது. அக்காலத்தில் தென் இந்தியாவில் விஜய நகர இராஜ்யம் சிறந்து விளங்கிற்று. அதனுல் போர்ச்சுகீசியரின் வியாபாரம் பெருகத்தலைப் பட்டது. நாளாக ஆக இந்தியாவின் மேற்குக் கரையில் போர்ச்சுகீசியர் பல வியாபார ஸ்தலங்களையும், பாதுகாப்புக் கோட்டைகளையும் அமைத்துக் கொண்டனர். ஓர் இராஜ்யமும் அவர்களுக்கு ஏற்பட்டது. சுமார் ஒரு நூற்ருண்டு இவர்களுடைய வியாபாரம் செழித்திருந்தது. பிறகு இவர்களுக்குப் போட்டியாக மற்ற ஐரோப்பியர்கள் வந்ததாலும், இவர்கள் வியாபாரம் செய்வதோடு நில்லாமல் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்ததாலும் தங்கள் அதிகாரத்தையும், வியாபாரத்தையும் நாளடைவில் இழந்தனர். தற்காலத்தில் இந்தியாவில் போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான இடங்கள் கோவா, டையு, டாமன் என்பவைகளேயாம்.



வாஸ்கோட காமா

டச்சுக்காரர்: போர்ச்சுகீசியரின் வியாபாரப் பெருக்கைக் கண்டு அவர்களுக்குப் போட்டியாக இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர்களுள் டச்சுக்காரர் ஒருவராவர். இவர்கள் ஹாலண்டு தேசத்தவர்கள். இவர்

கள் இந்தியாவின் மேற்கு, கிழக்குக் கடற்கரை நெடுக லும் பல வியாபாரக் கிடங்குகளை ஏற்படுத்திக் கொண்டு வர்த்தகம் செய்தனர். இவைகளன்றி இலங்கைத் தீவிலும், கிழக்கு இந்தியத் தீவுகளாகிய சுமத்திரா, ஜாவா முதலிய இடங்களிலும் இவர்களுக்கு வியாபார வசதிகள் ஏற்பட்டன. ஆனால் இந்தியாவில் ஆங்கி லேயரின் போட்டி ஏற்படவே அவர்களுடன் போராட முடியாமல் டச்சுக்காரர் இந்தியா வியாபாரத்தை நிறுத்திக் கொண்டனர்.

ஆங்கிலேயர்: இங்கிலாந்து தேசத்தவரான ஆங் கிலேயரும் இந்தியாவுடன் வர்த்தகம் செய்யத் தொடங் கினர். கி. பி. 1600-ல் சில ஆங்கிலேய வர்த்தகர்கள் ஒன்று கூடிக் கிழக்கு இந்தியக் கம்பெனி என்னும் பெயருடன் இங்கிலாந்தின் அரசியான எலிஸபெத் மகாராணியினிடம் சாஸனம் பெற்று இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்தனர். நாளடைவில் சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்கள் இவர்களின் முக்கிய வியாபார ஸ்தலங்களாயின.

பிரெஞ்சுக்காரர்: இந்திய வியாபாரத்தில் ஆங்கி லேயருக்குக் கிடைத்த லாபத்தைக்கண்டு, அவர்களுக் குப் போட்டியாகப் பிரான்ஸ் தேசத்தவரான பிரெஞ்சுக் காரர் பிரெஞ்சுக் கிழக்கு இந்தியக் கம்பெனி என்றொரு சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு இந்தியாவுக்கு வியா பாரம் செய்ய வந்தனர். புதுச்சேரி, சந்திரநாகூர் முத லியன அவர்களுடைய வியாபார ஸ்தலங்களாயின.

நாளடைவில் இவர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் போட்டி அதிகரித்தது. சுதேச மன்னர்களின் சண்டைகளில் இவர்கள் கலந்துகொண்டு போர் செய்யத் தலைப்பட்டனர். முடிவில் பிரெஞ்சுக்காரர் தோல்வியுற்றுத் தங்கள் வியாபாரத்தையும், செல்வாக்கையும் இழந்தனர். இப்பொழுது இந்தியாவில் அவர்களுக்குச் சொந்தமாக இருப்பவை புதுச்சேரி, காரைக்கால், ஏனம், சந்திரநாகூர், மாஹி என்பனவாம்.

ஆங்கிலேயர் படிப்படியாக வியாபாரத்தில் முன்னேற்றமடைந்து, காலக்கிரமத்தில் இந்திய நாடுகளையும் வென்று அவற்றின் அரசாட்சியைக் கைக்கொண்டனர்.

கேள்விகள்

1. ஐரோப்பியர்கள் இந்தியாவுக்குக் கடல் மார்க்கம் கண்டுபிடிக்க ஏன் முயற்சித்தனர்?

2. போர்ச்சுகீசியரின் வியாபாரம் ஏன் அழிந்தது?

3. தற்காலம் இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசிய வியாபார ஸ்தலங்கள் எவை?

4. டச்சுக்காரர் ஏன் இந்திய வியாபாரத்தை நிறுத்திக் கொண்டனர்?

5. இப்பொழுது இந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் பட்டணங்களைச் சொல்லு.

21. மகாராஷ்டிரர்கள்—சிவாஜி

மகாராஷ்டிரர்கள் : தக்ஷிணபீடபூமியின் மேற்குப் பாகத்திற்கு மகாராஷ்டிரம் என்பது பெயர். அங்கு வசித்துவந்தவர்கள் மகாராஷ்டிரர்கள். அவர்கள் வசித்துவந்த பிரதேசம் ஒரு மலைநாடானபடியால் அவர்கள் சுறுசுறுப்பும் வீரமும் பொருந்தியவர்களாக இருந்தார்கள். அவர்கள் மலைகளின்மீது கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வசித்தார்கள்; வேகமாகச் செல்லும் மட்டக்குதிரைகளின்மீது ஏறிச்சென்று சமவெளிகளிலுள்ள கிராமங்களைக் கொள்ளையடித்து எதிரிகள் கையில் அகப்படாமல் தங்கள் கோட்டைகளில் வந்து ஒளிந்துகொள்ளுவார்கள். கரடுமுரடான இவர்கள் நாட்டின்மீது அந்நிய நாட்டினர் படையெடுத்துத் தீங்கிழைப்பது முடியாத காரியம். எனவே, மகாராஷ்டிரர்கள் தங்கள் பழைய பழக்கவழக்கங்களையே பின்பற்றி வந்தனர். இவர்கள் இந்து மதத்தில் பற்றுள்ளவர்கள்; தேசாபிமானங் கொண்டவர்கள்; ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். காலக்கிரமத்தில் இவர்களில் பலர் முகம்மதிய அரசாங்கத்தில் உத்தியோகத்தில் அமர்ந்தனர்.

சிவாஜியின் இளமைப்பருவம் : மகாராஷ்டிரருள் பல வம்சங்கள் உண்டு, அவைகளில் ஒன்ருகிய பான்ஸ்லே வம்சத்தில் சிவாஜி கி. பி. 1627-ல் பிறந்தார். இவருடைய தகப்பனுராகிய ஷாஜி, பிஜப்பூர் சுல்

தானிடம் ஒரு சேனைத் தலைவராயிருந்தார். சிவாஜி பிறந்தது முதல் ஜிஜிபாய் என்னும் தமது அன்னையுடன் வாழ்ந்துவந்தார்.

ஜிஜிபாய் தெய்வபக்தி உள்ளவர்; இந்துமதப் பற்று உடையவர். சிவாஜி சிறந்த வீரராகவும், இந்து மதத்தில் பற்றுள்ளவராகவும் இருக்கவேண்டுமென்று அவர் எண்ணினார். ஆகவே, அவர் சிவாஜிக்கு இராமாயணம், மகாபாரதம் முதலிய கதைகளைச் சொல்லிவந்தார். அவைகளைக் கேட்ட சிவாஜி தாமும் ஸ்ரீ கிருஷ்ணன், இராமர், அர்ச்சுனன், பீமன் முதலியவர்களைப் போல் ஒழுக்கத்தில் சிறந்து ஒப்பற்ற வீரராக வேண்டுமென்று தீர்மானித்தார்.

தாதாஜி காண்டதேவ் : சிறுவயதில் தாதாஜி காண்டதேவ் என்னும் பிராமணரிடம் சிவாஜி கல்விகற்றார். அவர் சிவாஜிக்கு இந்துமதத்தின் பெருமையை அடிக்கடி எடுத்துச் சொன்னதோடு, போர்த் தொழிலையும் கற்றுக்கொடுத்தார். இச்சமயத்தில் சிவாஜிக்கு ராமதாஸ் ஸ்வாமி என்னும் சிறந்த பக்த சிகாமணியின் நட்பும் கிடைத்தது. இளம் பிராயத்திலிருந்தே சிவாஜியிடம் காணப்பட்ட அறிவு, கடவுள் பக்தி, மதப்பற்று, தேசாபிமானம் முதலிய குணங்களுக்குக் காண்டதேவரின் போதனையும், ராமதாஸரின் நட்புமே முக்கிய காரணங்களாகும்.

சிவாஜியின் அதிகாரவளர்ச்சி : சிறு வயதிலிருந்தே சிவாஜி மன உறுதியும், தேகபலமும், சமயோசித புத்தி

யும் கொண்டு சிறந்து விளங்கினர். இந்துமதத்தையும், அதன் தர்மங்களையும் பாதுகாக்கவே தாம் ஜன்மம் எடுத்ததாக அவர் கருதினர். தமக்கு வயது பதினாறு ஆனபொழுது அவர் சில போர்வீரர்களைச் சேர்த்துக்கொண்டு பிஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான சில கோட்டைகளைப் பிடித்தார். அதனால் கோபங்கொண்ட சுல்தான் அப்ஸல்கான் என்னும் படைத் தலைவரைச் சிவாஜியின்மீது ஏவினர். ஆனால் அப்ஸல்கான் கொலை யுண்டார். அவருடைய சேனையும் சிதறிப்போயிற்று. பிஜப்பூர் சுல்தான் சிவாஜியுடன் நட்புக்கொண்டார். சிவாஜிக்குப் பேரும், புகழும் ஏற்பட்டன.

சிவாஜி

பின்னர் சிவாஜி முகலாய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த இடங்களைத் தாக்கத் தலைப்பட்டார். அப்பொழுது சக்கரவர்த்தியாயிருந்த ஔரங்கசீப் தமது படைத்தலைவரான ஷாயிஸ்டகானை ஒரு சேனையுடன் சிவாஜியைத் தாக்க அனுப்பினர். ஆனால் சிவாஜி தந்திரமாக ஷாயிஸ்டகானையும், அவருடைய சேனையையும் விரட்டி அடித்தார்.

சிவாஜி அரசராதல் : அதன் பிறகு கி. பி. 1665-ல் ஒளரங்கசீப் மீண்டும் ஒரு பெரிய சேனையை அனுப்ப, சிவாஜி அச் சேனையை எதிர்ப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்து ஒளரங்கசீபுடன் நட்புக்கொள்ள உடன்பட்டு டில்லிக்குச் சென்றார். ஆனால் அங்கு அவருக்குக் கிடைத்த மரியாதையில் திருப்தி ஏற்படாததால் அவர் ஒளரங்கசீபினிடம் கோபங்கொண்டார். ஒளரங்கசீப் அவரைக் காவலில் வைத்தார். ஆனால் சிவாஜி தந்திரமாகத் தப்பி வெளியேறித் தம் நாடு சென்றார்; தம்மை எதிர்த்து வந்த முகலாய சேனைகளைப் பல இடங்களில் வென்றார். கி. பி. 1674-ல் ரைகார் என்னும் கோட்டையில் சிவாஜி மகாராஷ்டிர அரசர் என்று முடி சூட்டிக் கொண்டார்.

சிவாஜியின் ஆட்சி : சிவாஜி ஆறுவருஷகாலம் அரசாண்டார். இவர் பிரஜைகளுக்கு அநேக நன்மைகள் செய்தார். ஏரி, குளங்களை ஏராளமாக வெட்டினார்; சத்திரங்களும், சாவடிகளும் எங்கும் ஏற்பட்டன. இவர் கோயில்களுக்கு ஏராளமான மானிபங்கள் விட்டார். இந்துமதப் பற்றுள்ளவராயினும் இவர் முகம்மதியரிடம் அன்பாயிருந்தார். முகம்மதியருடன் அடிக்கடி போர்புரிந்தாராயினும் இவர் அவர்களுடைய மசூதிகளையாவது, அவர்களுடைய வேதமாகிய குரானையாவது அவமதித்ததாகச் சொல்லமுடியாது. இவருடைய அரசாட்சியின் பயனாக மகாராஷ்டிரருக்குள் பலமான தேசப்பற்றும், ஜாதிக் கட்டும் தோன்றலாயின.

சிவாஜிக்குப் பிறகு மகாராஷ்டிர இராஜ்யம் வரவர அதி உன்னத நிலே அடைந்து கடைசியில் ஆங்கிலேயரால் ஜயிக்கப் பட்டது.

கேள்விகள்

1. மகாராஷ்டிரர்களின் நாடு எங்கு உள்ளது? அவர்கள் சிறந்த வீரர்களாக விளங்கக் காரணமென்ன?

2. சிவாஜியின் பெற்ருேர்கள் யார்? அவர்களுடைய குணுதிசயங்களேப் பற்றி எழுது.

3. அப்ஸல் கான், ஷாயிஸ்டகான் ஆகிய இவர்களேப் பற்றிக் குறிப்பு எழுது.

4. சிவாஜி குடிகளுக்குச் செய்த நற்காரியங்கள் என்ன?

---

22. ராபர்ட் கிளேவ்

முன்ஞெரு பாடத்தில் இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்த ஐரோப்பியர்களுள் ஆங்கிலேயரே முன்னேற்றமடைந்து கடைசியில் இந்திய நாடுகளேச் சிறிது சிறிதாக வென்று அவற்றின் அரசாட்சியையும் கைக்கொண்டார்கள் என்று சொன்ஞேமல்லவா? இந்தியாவில் ஆங்கிலேய இராஜ்யத்தை ஸ்தாபித்தவர் ராபர்ட் கிளேவ் என்பவராவர்.

கிளேவின் பூர்வ சரித்திரம்: கிளேவ் இங்கிலாந்தில் பிறந்தவர். குழந்தைப் பருவம் முதற்கொண்டே இவர் மிகத் துஷ்டராயிருந்தார்; பெற்ருேர்கள் சொற்படி கேட்

பதில்லை; பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகப் போவதில்லை.

ராபர்ட் கிளைவ்

தம்மைப் போன்ற சில சிறுவர்களைச்சேர்த்துக்கொண்டு கடைக்காரர்களுடனும், தெருக்களில் போகிறவர்களுடனும் இவர் சண்டையிடுவார். என்ன செய்வதென்று தோன்ருமல் இவர் எங்கேயாவது தொலைந்தால் சரி யென்று எண்ணி இவருடைய தகப்பனர் இவரைத் தூரதேசமாகிய இந்தியாவுக்கு அனுப்பினர். இங்கு இவருக்குக் கிழக்கு இந்தியக் கம்பெனியில் ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது.

கர்நாடகயுத்தம்: அக்காலத்தில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் வியாபாரத்தில் போட்டி ஏற்பட்டுச் சண்டைகளும் நேரலாயின. பிரெஞ்சுக்காரர்களுக்குத் தலைவராயிருந்த டூப்லே ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து துரத்திவிட்டுப் பிரெஞ்சு அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று கருதினர். அச்சமயத்தில் கர்நாடக நவாப் பட்டவிஷயமாக முகம்மது அலி என்பவருக்கும், சந்தா சாகிப் என்பவருக்கும் சண்டை உண்டாயிற்று. டூப்லே பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் அதிகப்படுத்த எண்ணிச் சந்தா சாகிபுக்கு உதவிசெய்தார். முகம்மது அலி தோல்வியுற்றுத் திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்

குள் ஒளிந்து கொண்டார். பிரெஞ்சுக்காரர்கள் திருச்சியை முற்றுகையிட்டனர்.

அப்போது முகம்மது அலி ஆங்கிலேயரின் உதவியை நாடினார். இதற்குள் குமாஸ்தா வேலையை விட்டு இராணுவத்தில் சேர்ந்திருந்த கிளைவ் ஒரு சேனையுடன் சென்று கர்நாடகத்தின் தலைநகராகிய ஆற்காட்டைப் பிடித்துக்கொண்டு பிரெஞ்சுக்காரரையும், சந்தா சாகிபையும் தோற்கடித்தார். இதனால் கிளைவுக்கு 'ஆற்காட்டு வீரர்' என்னும் பட்டம் கிடைத்தது. கிளைவின் சாமர்த்தியத்தால் முகம்மது அலி கர்நாடகத்து நவாப் ஆனார். ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரித்தது.

வங்காள நவாபுடன் சண்டை: வங்காளத்தில் நவாபாயிருந்த சிராஜ் உத் தௌலா என்பவர் கல்கத்தாவிலுள்ள ஆங்கிலேயரைப் பகைத்துத் தீங்கிழைத்தார். கிளைவ் அங்கே சென்று கி. பி. 1757-ல் பிளாசி என்னுமிடத்தில் சிராஜ் உத் தௌலாவைத் தோற்கடித்து மீர்ஜாபர் என்பவரை நவாபாக்கினார். புதிய நவாப் ஆங்கிலேயருக்குத் தமது இராஜ்யத்தின் சில பாகங்களையும், ஏராளமான பொருள்களையும் கொடுத்து உதவினார். ஆங்கிலேயர் ஆட்சிமுறையில் இந்தியாவில் முதன் முதலாகப் பெற்ற இடங்கள் இவைகளேயாகும். இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கிலேய இராஜ்யம் நாளடைவில் பரவத்தொடங்கிற்று.

அரிய பெரிய காரியங்களைச் செய்து ஆங்கிலேய இராஜ்யத்தை இந்தியாவில் நிலைநாட்டினதற்காக ஆங்கிலேய அரசாங்கம் கிளைவுக்குப் பிரபுப் பட்டம் அளித்தது. கி. பி. 1764 முதல் 1767 வரை அவர் வங்காளக் கவர்னராயிருந்து பல சீர்திருத்தங்களைச் செய்து விட்டுப் பெரும் புகழுடன் தம் நாடு சென்றார்.

கேள்விகள்

1. கிளைவின் பூர்வ சரித்திரத்தைப் பற்றிச் சில வரிகள் எழுது.

2. கிளைவுக்கு 'ஆற்காட்டு வீரர்' என்னும் பட்டம் எவ்வாறு கிடைத்தது?

3. பிளாஸிச் சண்டையின் காரணமென்ன? முடிவென்ன?

4. பிளாஸிச் சண்டை சரித்திரத்தில் எவ்வாறு முக்கியமானது?

---

23. வாரன் ஹேஸ்டிங்ஸ்

வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னர்: கிளைவ் இங்கிலாந்துக்குச் சென்ற சில ஆண்டுகளுக்குப் பிறகு வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் வங்காளக் கவர்னராக நியமிக்கப்பட்டார். இவரும் கிளைவைப்போலவே ஒரு குமாஸ்தாவாகக் கி. பி. 1750-ல் இந்தியாவுக்கு வந்தார். இவர் மிகத் திறமை வாய்ந்தவர்; மன உறுதி கொண்டவர்; உண்மையாகவும், ஒழுங்காகவும் நடப்பவர்; தம் சாமர்த்தியத்தாலும், விடாமுயற்சியாலும்

படிப்படியாக உயர்ந்து கவர்னர் பதவி அடைந்தார். கிளைவ் இந்தியாவில் வேரூன்றச் செய்த ஆங்கிலேய இராஜ்யத்தை வாரன் ஹேஸ்டிங்ஸ் நிலைபெறச் செய்தார்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல்: ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஆனதும் குடிகளின் நன்மையை உத்தேசித்துச் சில சீர்திருத்தங்கள் செய்தார். வங்காளத்தை அவர் பல ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொரு ஜில்லாவுக்கும் வரி வசூல் செய்யவும், நியாய விசாரணை செய்யவும் ஒரு ஆங்கிலேயக் கலெக்டரை நியமித்தார். கல்கத்தாவில் ஸிவில், கிரிமினல் வழக்குகளை விசாரிக்க நீதிஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டன. எல்லோரும் அறியும்படி இந்து, முகம்மதிய சட்டங்களை ஹேஸ்டிங்ஸ் எழுதி வெளியிட்டார்.


வாரன் ஹேஸ்டிங்ஸ்

கம்பெனியின் ஆட்சியைச் சீர்படுத்தவும், அதைத் தாங்கள் மேல் பார்வையிட வேண்டுமென்ற நோக்கத்துடனும் ஆங்கிலேய அரசாங்கத்தார் ஒழுங்கு படுத்தும் சட்டம் என்னும் ஒரு சட்டத்தை கி. பி. 1773-ல் ஏற்படுத்தினார்கள். அதன் ஷரத்துகளின் ஒன்றின் பிரகாரம் வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல் ஆனார்.

சென்னை, பம்பாய் கவர்னர்கள் இவருடைய அதிகாரத்துக்கு உட்பட்டவர்களானார்கள்.

ஹேஸ்டிங்ஸின் வேலை: ஹேஸ்டிங்ஸ் செய்த காரியங்களில் அவர் கம்பெனியின் பொருளாதார நிலையைப் பலப் படுத்தியதும், ஆங்கிலேய இராஜ்யத்துக்கு ஏற்பட்ட ஆபத்துக்களைப் போக்கடித்ததும் முக்கியமானவை. வங்காள நவாபிற்குக் கம்பெனியார் கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தை அவர் குறைத்தார். முகலாயச் சக்கரவர்த்தி ஆங்கிலேயரின் ஆதரவை விட்டு மகாராஷ்டிரரின் ஆதரவை நாடியபடியால் அவருக்குக் கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தையும் ஹேஸ்டிங்ஸ் நிறுத்தினார். மேலும் அயோத்தி நவாபுக்கு ஒரு போரில் உதவி செய்து ஏராளமான பணத்தை அவர் பெற்றார்.

மைசூரில் ஆட்சி புரிந்த ஹைதர் அலியும், மகாராஷ்டிரரும் அக்காலத்தில் மிகுந்த வலிமை பெற்றிருந்தனர். ஹேஸ்டிங்ஸ் அவர்களுடன் தனித்தனியே ஒரே காலத்தில் போர் தொடங்க நேர்ந்தது. சற்றும் பின் வாங்காமல் அவர் அவர்களுடன் போராடினார்; ஆங்கிலேயரின் போர்த்திறத்தை அவர்கள் அறியுமாறு செய்தார்; கௌரவமாக அவர்களுடன் உடன்படிக்கைகள் செய்து கொண்டார். இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி நிலைபெற்றது.

கேள்விகள்

1. வாரன் ஹேஸ்டிங்ஸின் குணாதிசயங்களைச் சொல்லு.

2. வங்காளத்தில் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள் யாவை?

3. ஹேஸ்டிங்ஸ் கம்பெனியின் பொருளாதார நிலையை எவ்வாறு பலப்படுத்தினார்?

4. ஒழுங்குபடுத்தும் சட்டம் எப்பொழுது ஏற்பட்டது? இதன் நோக்கமென்ன?

5. அவர் காலத்தில் ஆங்கிலேய இராஜ்யத்திற்கு ஏற்பட்ட ஆபத்து என்ன? அதை அவர் எவ்வாறு ஒழித்தார்?

---

24. ஹைதர் அலியும், திப்பு சுல்தானும்

மைசூர் தென்னிந்தியாவிலுள்ள ஒரு சுதேச இராஜ்யம். ஆதிகாலம் முதற்கொண்டு அது இந்து அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இப்பொழுதும் அது ஒரு இந்து அரசரால் ஆளப்பட்டு வருகிறது. ஆனால் கி. பி. 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுமார் 50 வருஷகாலம் அது முகம்மதியர் ஆட்சியில் இருந்தது. அதை ஆண்ட முகம்மதிய அரசர்கள் ஹைதர் அலியும், அவருடைய புதல்வரான திப்பு சுல்தானுமாவர்.

ஹைதர் மைசூர் அரசைக் கைப்பற்றுதல்: ஹைதர் அலி ஒரு ஏழை முகம்மதியரின் குமாரர்; மைசூர் அரசரின் சேனையில் ஒரு போர் வீரராக அமர்ந்திருந்தார். அவர் தமது சாமர்த்தியத்தால் நாளடைவில் அச்

சேனைத் தலைவரானார். திடீரென்று மைசூர் அரசர் இறந்தார். அவருடைய புதல்வர் சிறியவராயிருந்தபடியால் அவருடைய சிறிய தகப்பனார் அரசரானார். ஆனால் இளவரசருக்கும், சிற்றப்பனுக்கும் சண்டை உண்டாகவே, ஹைதர் இளவரசருடன் சேர்ந்துகொண்டு சிற்றப்பனைச் சிறையில் வைத்தார். பிறகு சமயம் பார்த்து இளவரசரையும் சிறையிலிட்டு அவர் தாமே மைசூர் அரசரானார்.



ஹைதர் அலி

ஆங்கிலேயருடன் சண்டை: ஹைதர் தம் இராஜ்யத்தைப் பெரிதாக்க எண்ணிச் சுற்றிலுமுள்ள நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று அவைகளை ஜயித்தார். இவருக்கும், ஆங்கிலேயருக்கும் இரண்டு முறை சண்டை நடந்தது. ஹைதருக்குப் பிரெஞ்சுக்காரர் உதவி செய்தனர். ஹைதரின் விரோதிகளான ஹைதராபாத்து நிஜாமும், மகாராஷ்டிரரும் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டார்கள். ஆனால் ஹைதர் தந்திரமாய் அவர்களைப் பிரித்தார்; ஆங்கிலேயரைப் பல இடங்களில் தோற்கடித்தார்; கர்நாடகத்தின் மீது படையெடுத்துச் சென்று சென்னையையும் தாக்கினார். சென்னை அரசாங்கத்தார் பயந்து ஹைதருடன் சமாதானம் செய்து கொண்டனர். இரண்டாம் முறை உண்

டான சண்டையில் ஹைதர் பல இடங்களில் தோற்றுராயினும் அவரால் ஆங்கிலேயச் சேனைகளுக்குப் பல கஷ்டங்கள் உண்டாயின. இப்போர் முடிவதற்குள் ஹைதர் கி. பி. 1782-ல் காலமானுர். ஆங்கிலேயர் அவருடைய மகனுன திப்பு சுல்தானுடன் சமாதானம் செய்து கொண்டனர்.

திப்பு சுல்தானும், ஆங்கிலேயரும்: ஹைதருக்குப் பிறகு திப்பு சுல்தான் அரசரானுர். இவர் தம் இராஜ்யத்தைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தால் திருவாங்கூரைத் தாக்கினுர். திருவாங்கூர் அரசர் ஆங்கிலேயரின் நண்பர். ஆகவே, திப்புவுக்கும் ஆங்கிலேயருக்கும் போர் மூண்டது. திப்பு தோல்வி அடைந்து தம் தலை நகராகிய ஸ்ரீரங்கப் பட்டணத்தில் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்து கொண்டார். அவர் யுத்தச் செலவுக்காக 330 லக்ஷம் ரூபாயும், தம் நாட்டின் சில பகுதிகளையும் ஆங்கிலேயருக்கும், அவர்களுடைய நண்பரான நிஜாமுக்கும் கொடுக்கவேண்டியதாயிற்று.

திப்பு சுல்தான்

திப்புவுக்கு ஆங்கிலேயரை ஒழித்துவிட வேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிற்று. பிரெஞ்சுக்காரருடன் நட்புக்கொண்டார். மீண்டும் போர் தொடங்கிற்று.

திப்பு தம் சேனையுடன் ஸ்ரீரங்கப் பட்டணத்தில் தங்கி யிருந்தார். ஆங்கிலேயர் அதைச் சூழ்ந்துகொண்டனர்; உணவுப் பொருள்கள் நகருக்குள் வரவொட்டாமல் தடுத்தனர். திப்பு தம் வீரர்களுடன் ஆங்கிலேயரைத் தாக்கினர். கொடிய யுத்தம் நடந்தது. திப்பு போர்க் களத்தில் மாண்டார்.

மைசூரில் இந்து அரசாட்சி ஏற்படல் : திப்பு இறந் ததும் ஆங்கிலேயர் அவருடைய குமாரர்களுக்கு உப காரச் சம்பளம் கொடுத்து வேலூரில் இருக்கும்படி திட்டம் செய்தனர். மைசூர் இராஜ்யத்தின் ஒரு பாகத் தைத் தாங்கள் வைத்துக்கொண்டு மற்றொரு பாகத்தை நிஜாமுக்கு முன்போலக் கொடுத்தனர். மீதியுள்ள சிறிய பாகத்திற்கு முன்பு மைசூரை ஆண்ட அரச வம்சத் தைச் சேர்ந்த ஒரு சிறுவரை அரசராக நியமித்தார்கள். இவருடைய சந்ததியாரே இப்பொழுது மைசூரை ஆண்டு வருகின்றனர்.

கேள்விகள்

1. ஹைதர் அலி எவ்வாறு மைசூர் அரசரானர்?

2. ஹைதருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த சண்டைகளைப் பற்றிச் சொல்லு.

3. திப்புசுல்தான் யார்? அவருக்கும் ஆங்கிலேயருக்கும் ஏன் சண்டை உண்டாயிற்று? அதன் முடிவென்ன?

---

25. வெல்லெஸ்லி பிரபு

கிளைவ் இந்தியாவில் ஆங்கிலேய இராஜ்யத்தை ஸ்தாபித்தாரென்றும், வாரன் ஹேஸ்டிங்ஸ் அதை நிலைபெறச் செய்தாரென்றும் முன்பு சொல்லப்பட்டது. ஆங்கிலேய இராஜ்யத்தை இந்தியாவில் பரவச்செய்த வெல்லெஸ்லி பிரபுவைப்பற்றி இப்பொழுது படிப்போம்.

இந்தியாவின் நிலைமையும், வெல்லெஸ்லியின் நோக்கமும் : வெல்லெஸ்லி ஒரு ஆங்கிலேயப் பிரபுவின் குடும்பத்தைச் சேர்ந்தவர். கி. பி. 1798-ல் இவர் கவர்னர் ஜெனரலாக வந்தார். இந்தியாவுக்கு வருவதற்கு முன்னமேயே இந்தியாவைப் பற்றிய அனுபவம் அவருக்கு உண்டு. இவர் ஆழ்ந்த யோசனையும், தாம் நினைத்த காரியத்தை எவ்வழியிலும் முடிக்கும் ஆற்றலும் உடையவர். இவர் இந்தியாவுக்கு வந்தபொழுது நாட்டில் குழப்பம் மிகுந்திருந்தது. சீரான அரசாட்சி இல்லாமல் ஜனங்கள் மிகவும் வருந்தினர். திப்பு சுல்தான், மகாராஷ்டிர மன்னர்கள், நிஜாம் முதலிய சுதேச மன்னர்கள் தங்களுக்குள் போராடிக் கொண்டிருந்தமையால் நாட்டின் நன்மையை அவர்கள் கவ

வெல்லெஸ்லி பிரபு

ணிக்க முடியாமல் போயிற்று. சுதேச மன்னர்களின் ஆட்சியைவிட ஆங்கிலேயரின் ஆட்சி நிச்சயமாகக் குடிகளுக்கு நன்மை விளைவிக்கக்கூடியது என்பதை வெல்லெஸ்லி கண்டறிந்தார்.

தவிரவும், மேலே சொல்லப்பட்ட சுதேச மன்னர்கள் பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களின் உதவியால் தங்கள் சேனைகளைப் பழக்கிவந்தார்கள். அவர்கள் ஆங்கிலேயரிடம் பகைமை பாராட்டி வந்தமையால், பிரெஞ்சுக்காரர் உதவியைக் கொண்டு அவர்கள் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து துரத்திவிட யத்தனிக்கக் கூடுமென்று வெல்லெஸ்லி எண்ணினார்.

ஆகவே, நாட்டின் நன்மையையும், ஆங்கிலேயரின் சுயநலத்தையும் கருதி வெல்லெஸ்லி பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை ஒழித்து ஆங்கிலேயரின் அதிகாரத்தை இந்தியா முழுவதிலும் பரவச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். ஆங்கிலேய ஏகாதிபத்யமே நாட்டின் குழப்பத்தைப் போக்கடிக்கும் மருந்து என்பதை அவர் உணர்ந்தார். சுதேச மன்னர்களை ஆங்கிலேயரின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்று அவர் நிச்சயித்தார்.

வெல்லெஸ்லி ஏற்படுத்திய புதிய திட்டம்: தம் எண்ணத்தை நிறைவேற்ற வெல்லெஸ்லி ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்தினார். 'சுதேச மன்னர்கள் ஒவ்வொருவரும் தம் தம் நாடுகளின் பாதுகாப்புக்காக ஒரு

ஆங்கிலேயச் சேனையை வைத்துக்கொள்ள வேண்டும்; அந்தச் சேனையின் செலவுக்காக அந்த அரசர்கள் பணமோ அல்லது தங்கள் இராஜ்யங்களின் சில பாகங்களேயோ ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டும்; அவர்கள் தங்கள் இராஜ்யத்தில் ஆங்கிலேயரைத் தவிர இதர ஐரோப்பியர்களே வேலேக்கு வைத்துக் கொள்ளக் கூடாது; அவர்கள் ஆங்கிலேயரின் உத்தரவு பெருமல் ஒருவரோடொருவர் சண்டை, சமாதானங்கள் செய்து கொள்ளக் கூடாது; ஒவ்வொரு சுதேச மன்னரும் தங்கள் ஆட்சியை மேல்பார்வையிடத் தங்கள் இராஜ்யத்தில் ஒரு ஆங்கிலேய ஸ்தானீகரை (ரெஸிடென்ட்) வைத்துக்கொள்ள வேண்டும்' என்பவை வெல்லெஸ்லி ஏற்படுத்திய புதிய திட்டத்தின் முக்கிய நிபந்தனேகளாகும்.

புதிய திட்டத்தின் பலன்: இப்புதிய ஏற்பாட்டை முதலில் ஒப்புக்கொண்டவர்கள் ஹைதராபாத் நிஜாமும், அயோத்தி நவாபும் ஆவர். நிஜாம் தாம் பெற்றுக் கொண்ட சேனையின் செலவுக்காகத் தமக்கு மைசூர் யுத்தங்களில் கிடைத்த நாடுகளாகிய கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபூர் என்னும் ஜில்லாக்களேயும், அயோத்தி நவாப் கங்கைக்கும், யமுனேக்கும் இடையில் உள்ள தோஅப் என்னும் செழிப்பான நாட்டையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர்.

திப்பு இந்த ஏற்பாட்டுக்கு இணங்காமல் ஆங்கிலேயருடன் சண்டை செய்து தோற்று இராஜ்யத்தை



இந்தியா 1805
ஆப்கானியர்
சீக்கியர்
ராஜபுத்திரர்
டில்லி
நேபாளம்
சிந்து
பாட்ரு
மகாராஷ்டிரர்கள்
கல்கத்தா
ஆர்காம்
அஸ்ஸே
நாக்புரி
சூரத்
பம்பாய்
நிஜாம் ராஜ்யம்
வடசர்கார்
வங்காளக் குடாக்கடல்
அராபிக்கடல்
மைசூர்
கர்நாடகம்
சென்னை
தஞ்சாவூர்
பிரிட்டிஷ்

இழந்தார். இந்த விஷயம் போன பாடத்தில் சொல்லப்பட்டது. மகாரஷ்டிர மன்னர்கள் முதலில் இவ்வேற்பாட்டிற்கு இணங்காமல் சண்டையில் தோற்ற பின்னர் ஏற்றுக் கொண்டனர். இதனாலும் பல நாடுகள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன.

இந்த ஏற்பாட்டினால் மாத்திர மில்லாமல் இதர வழிகளிலும் வெல்லெஸ்லி ஆங்கிலேய இராஜ்யத்தைப் பெருக்கினார். தஞ்சாவூர், கர்நாடகம் ஆகிய இடங்களில் நல்ல அரசாட்சியில்லாததால் அவற்றை ஆண்ட அரசர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அந்நாடுகளை அவர் ஆங்கிலேய இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். இந்தாடுகளுடன் மைசூர் யுத்தங்களில் கிடைத்த இடங்களையும், நிஜாமால் கொடுக்கப்பட்ட ஜில்லாக்களையும் சேர்த்து வெல்லெஸ்லி சென்னை இராஜதானியை ஏற்படுத்தினார். இவர் கி. பி. 1805-ல் இங்கிலாந்து சென்றார்.

கேள்விகள்

1. வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரல் ஆனபொழுது இந்தியாவின் நிலைமை எவ்வாறு இருந்தது?

2. வெல்லெஸ்லி என்ன செய்யத் தீர்மானித்தார்? ஏன்?

3. அவர் ஏற்படுத்திய புதிய திட்டத்தின் நிபந்தனைகளைச் சொல்லு.

4. வெல்லெஸ்லி எவ்வாறு ஆங்கிலேய இராஜ்யத்தைப் பெருக்கினார்?

26. பென்டிங்க் பிரபுவும், இராஜா ராம் மோஹன் ராயும்

சிறுவர்களே, முன்பாடங்களில் இந்தியாவில் ஆங்கிலேய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதையும், அது வளர்ச்சியடைந்த விதத்தையும் பற்றிப் படித்தீர்கள். இப்பொழுது அந்த இராஜ்யத்தில் அமைதியை ஏற்படுத்தி ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்த பென்டிங்க் பிரபுவைப் பற்றியும் அவருக்கு உதவியா யிருந்த இராஜா ராம் மோஹன் ராய் என்பவரைப் பற்றியும் படிப்போம்.

பென்டிங்க் பிரபு: பென்டிங்க் கி. பி. 1828 முதல் 1835 வரை கவர்னர் ஜெனரலாயிருந்தார். இதற்கு முன் சென்னை கவர்னராயிருந்த படியால் இந்தியாவைப் பற்றிய விஷயங்களை இவர் நன்ருய் அறிந்திருந்தார். இவர் புத்தி நுட்பமுள்ளவர்; சிறந்த அறிவாளி; குடிகளுக்கு நன்மை செய்வதில் ஆர்வம் கொண்டவர். ஆங்கிலேய அரசாட்சியில் பிரஜைகள் இன்புற்று வாழ வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இவர் கம்பெனியின் ஆட்சியைக் கைக்கொண்டு நடத்தலானுர். அதற்கேற்றவாறு இவர் காலத்தில் யுத்தங்க

பென்டிங்க் பிரபு

ளொன்றும் ஏற்படாததால் இவர் தாம் கொண்ட எண்ணத்தைச் சரிவர நிறைவேற்ற முடிந்தது.

பென்டிங்க் செய்த சீர்திருத்தங்கள்: பென்டிங்க் செய்த சீர்திருத்தங்களில் இந்துக்களிடமிருந்த உடன் கட்டை ஏறுதல் என்னும் கொடிய வழக்கத்தை நிறுத்தினது முக்கியமானதாகும். கணவன் இறந்தால் மனைவியும் கூடவே தீப்புகுதல் அக்காலத்தில் வழக்கமாயிருந்தது. அவ்வாறு உயிரை விட இஷ்டப்படாத ஸ்திரீகள் பலவந்தப்படுத்தப்பட்டார்கள். அக்பர் இந்தக் கொடிய வழக்கத்தை நிறுத்த முயன்றார் என்று முன்பு சொன்னோம். பென்டிங்க் ஒரு சட்டம் இயற்றி இவ்வழக்கத்திற்கு உடந்தையாயிருந்தவர்களை கடுமையாகத் தண்டித்ததால் இவ்வழக்கம் அறவே ஒழிந்தது.

தக்கர்கள் என்னும் கொலைபாதகர்கள் அக்காலத்தில் எங்கும் திரிந்து கொண்டு வழிப்போக்கர்களுக்குப் பெருந் தீங்கிழைத்து வந்தனர். பென்டிங்க் அவர்களை அடியோடு ஒழித்து நாட்டுக்கு நன்மை புரிந்தார்.

பென்டிங்க் காலத்தில் ஆங்கிலக் கல்வி அபிவிருத்தி அடைந்தது. கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபையின் சட்டமெம்பராயிருந்த மெகாலே பிரபுவின் உதவியால் அவர் ஆங்கிலத்தை இராஜாங்க பாஷையாக்கினார். அக்கல்வியைப் பரப்பப் பல கல்விச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆங்கிலத்தைப் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசாங்கத்தில் பெரிய

உத்தியோகங்கள் அளிக்கப்பட்டன. இவ்வாறே பல இந்தியர்கள் டிப்டி கலெக்டர்களாகவும், சப்ஜட்ஜுக ளாகவும், முன்சீபுகளாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

இராஜா ராம் மோஹன் ராய்: மேற் கூறிய சீர் திருத்தங்கள் செய்வதில் பென்டிங்குக்கு உதவியாயிருந் தவர் இராஜா ராம் மோஹன் ராய் என்னும் வங்காளப் பிராமணர் ஆவார். இவர் சிறந்த அறிவாளி; சிறு வயதிலேயே மதசம்பந்தமான பல நூல்களைக் கற்றறிந் தார். வேதத்தில் சொல்லப்படாத சில சடங்குகளை யும், ஆசாரங்களையும் இந்துக்கள் அநுசரித்து வந் ததை அவர் கண்டார்; ஆசார சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டார். பத்து வருஷ காலம் இவர் கம் பெனியின் கீழ் வேலைபார்த்தார். வங்காள பாஷை, சம்ஸ்கிருதம் ஆகியவற்றில் மிகத் தேர்ச்சி பெற்றி ருந்ததோடு ஆங்கிலம், லத்தீன் முதலிய மொழிகளையும் இவர் நன்கு பயின்றார்.

கி. பி. 1813-ல் இவர் தம் வேலையை ராஜிநாமா செய்து சமூகசீர்திருத்தம் செய்வதில் ஈடுபட்டார்; வேத சம்பந்தமான சம்ஸ்கிருத நூல்களைத் தம்மு டைய தாய் பாஷையில் மொழி பெயர்த்து எல்லா ஜனங்களும் அவற்றின் விஷயங்களைக் கற்றறியுமாறு செய்தார். வேதங்களில் கூறும் பிரகாரம் நடப்பவர் களுக்கென்று பிரம்ம சமாஜம் என்ற ஒரு சமயத்தை அவர் ஏற்படுத்தினர். எல்லோரும் சகோதரர்கள் என் பதும், கடவுள் நம்முடைய பிதா என்பதும் அவரு

டைய கொள்கை. பிரம்ம சமாஜத்தில் பலர் சேர்ந்து உழைத்து வரலாயினர். அம்மதம் இன்றும் நிலைத்திருக்கிறது. ராம் மோஹன்ராய் இந்திய மக்களின் முன்னேற்றத்திற்காகச் செய்த காரியங்கள் என்றும் அழியாதனவாகும்.

கேள்விகள்

1. பென்டிங்க் பிரபு இந்திய மக்களுக்குச் செய்த நன்மைகள் என்ன?

2. இராஜாராம் மோஹன் ராய், மெகாலே ஆகிய இவர்களைப் பற்றிக் குறிப்பு எழுது.

---

27. விக்டோரியா மகாராணியாரின் மகா சாஸனம்

வெல்லெஸ்லி பிரபுவுக்குப் பிறகு ஹேஸ்டிங்ஸ், டல்ஹௌஸி என்பவர்கள் கவர்னர்ஜெனரலாயிருந்த பொழுது இந்தியாவில் ஆங்கிலேய இராஜ்யம் பின்னும் பெருகிற்று. இந்தியாவின் பல பாகங்களும் ஆங்கிலேயரின் நேரான ஆட்சிக்குள் அல்லது அவர்களுடைய பாதுகாப்புக்குள் வரலாயின. இடையிடையே இந்திய மக்களின் நன்மையின் பொருட்டுப் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆயினும், கம்பெனியார் வியாபாரத்தையும் கவனித்துக் கொண்டு ஒரு பெரிய தேச ஆட்சியை நடத்துவது முடியாதகாரியம்.

இது விஷயம் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேய அரசாங்கத்துக்குத் தெரியவந்தது. ஒழுங்கு படுத்தும் சட்டத்தைப் போன்ற மசோதாக்களை இடையிடையே உண்டாக்கிக் கம்பெனியின் ஆட்சியில் தங்கள் அமுலை ஆங்கிலேய அரசாங்கத்தார் செலுத்திவந்தாராயினும், இந்திய அரசாட்சி முழுவதையும் தாங்களே கைக்கொண்டு நடத்துவது சிறந்த காரியம் என்பது அவர்களுக்குத் தோன்றிற்று.

பெரிய இந்தியக் கலகம் : இவ்வாறு ஆங்கிலேய அரசாங்கத்தார் ஆலோசித்துக் கொண்டிருக்கையில், கி. பி. 1857-ல் இந்தியாவில் ஒரு பெரிய கலகம் ஏற்பட்டது. இதற்குப் பெரிய இந்தியக் கலகம் என்று பெயர். முதலில் இந்தியச் சிப்பாய்களே கலகமாகக்கிளம்பினர். ஆனால் சீக்கிரத்தில் கம்பெனியின் ஆட்சியில் அதிருப்தி கொண்ட சுதேச மன்னர்களும், சில பொது ஜனங்களும் கலகக்காரர்களுக்கு உதவிபுரிந்தனர். வெகு பாடுபட்டு ஆங்கிலேயர் இக் கலகத்தை அடக்கினர். பெரிய சாம்ராஜ்யத்தைக் கம்பெனியார் ஆட்சிபுரிவது முடியாதகாரியமென்பது தெளிவாயிற்று.

கம்பெனி ஆட்சியின் முடிவு : கி. பி. 1858-ல் இந்தியாவில் கம்பெனி ஆட்சி முடிவுபெற்றது. அப்பொழுது இங்கிலாந்தில் அரசாட்சி செய்துவந்த விக்டோரியா மகாராணியார் இந்திய அரசாட்சியைத் தாமே ஏற்றுக் கொண்டார். அதுமுதல் இந்தியாவை ஆளும் கவர்னர் ஜெனரலுக்கு வைஸராய் (இராஜப்பிரதிநிதி) என்

னும் பெயர் ஏற்பட்டது. அக்காலத்தில் கவர்னர் ஜெனரலாயிருந்த கானிங் பிரபு இந்தியாவின் முதல் வைஸராயானார்.

மகா சாஸனம் : மகாராணியார் மிகவும் கருணை யுள்ளவர்; நீதிதவறுதவர்; எல்லோரிடத்திலும் அன்பு கொண்டு அன்னைபோல் இருந்துவந்தார். அவர் இந்திய அரசாட்சியைக் கைக்கொண்டதும் இந்திய மக்களுக்கு ஒரு சிறந்த சாஸனத்தை வெளியிட்டார். மகாராணியாருக்கு இந்திய மக்களிடமிருந்த அன்பையும், நல்லெண்ணத்தையும் இச் சாஸனம் வெளிப்படுத்தியது. இந்தியரின் முன்னேற்றத்திற்கு இது அடிப்படையாக வுள்ளது. எனவே, இதைப் பெருமையாக நாம் இன்னும் கொண்டாடுகிறோம்.

விக்டோரியா மகாராணியார்

மகா சாஸனத்தில் கூறியுள்ள விஷயங்களில் சிலவற்றை இங்கே கூறுவோம். அவை 'மதசம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடமாட்டார்கள். ஜாதிமத வித்தியாசம் பாராமல் யோக்கியதையையும், திறமையையும் ஆதாரமாகக் கொண்டு அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்கள் இந்தியருக்கு அளிக்கப்படும். புதிதாய்ச் சுதேச இராஜ்யங்களை ஆங்கிலேய இராஜ்யத்துடன் சேர்க்கவேண்டு

மென்னும் எண்ணம் அரசாங்கத்தாருக்கில்லை. கம்பெனியார் சுதேசமன்னர்களுடன் செய்துள்ள ஒப்பந்தங்களும், அவர்களுக்குக் கொடுத்துள்ள உரிமைகளும் பாதுகாக்கப்படும். இந்திய மக்களின் முன்னேற்றத்தை முதன்மையாகக் கொண்டு இந்திய அரசாங்கம் நடைபெறும்' என்பனவாம்.

லிட்டன் பிரபு இந்தியா வைஸராயாக இருந்த காலத்தில், கி. பி. 1877-ல் விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் சக்கரவர்த்தினி என்னும் பட்டத்தை ஏற்றுக்கொண்டார். அதுமுதல் இங்கிலாந்து மன்னர்கள் இந்தியாவின் சக்கரவர்த்திகளாக இருந்து வருகின்றனர். விக்டோரியா கி. பி. 1901-ல் காலமானார்.

கேள்விகள்

1. இந்தியாவில் கம்பெனி ஆட்சி எவ்வாறு முடிவடைந்தது?

2. இந்தியாவின் முதல் வைஸராய் யார்?

3. விக்டோரியா மகாராணியாரின் மகா சாஸனத்தில் கூறியுள்ள விஷயங்கள் நான்கு சொல்லு.

---

28. வைஸராய்களின் ஆட்சியில் தேச முன்னேற்றம்

இங்கிலாந்து மன்னர்கள் இந்திய அரசாட்சியை வைஸராய்கள் மூலம் ஆட்சிபுரியுங் காலத்தில் நமது தேசம் பல துறைகளிலும் மேம்பாடடையலாயிற்று. போக்குவரவு சாதனங்களும், அவற்றால் விருத்தி

அடையக்கூடிய விவசாயம், வியாபாரம் முதலியனவும் பெருகிக்கொண்டு வருகின்றன. அணைக்கட்டுகளும், கால்வாய்களும் அமைக்கப்படுவதால் நீர்ப்பாசன வசதிகள் அதிகம் ஏற்பட்டு நாட்டில் பஞ்சம் தவிர்க்கப் படுகிறது.

பென்டிங்க் பிரபு காலத்தில் ஆங்கிலக் கல்வி பரவுவதற்குப் பல கலாசாலைகள் ஏற்பட்டனவென்றும், அக்கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டனவென்றும் சொன்னோம். மகாராணியாரின் சாஸனம் அவற்றைப் பின்னும் உறுதிப்படுத்தின. கல்வியில் தேர்ச்சியடைந்த இந்தியர்கள் அரசியலில் பழக வேண்டுமென்னும் ஆசை கொண்டனர்.

ரிப்பன் பிரபு (கி. பி. 1880-84): இவர் இந்திய மக்களிடம் அன்பு கொண்டவர்; இந்தியர்களைத் தேச ஆட்சியில் பழக்க வேண்டுமென்று எண்ணினார். ஸ்தலசுயஆட்சிச் சட்டம் என்னும் ஒரு சட்டத்தை இவர் ஏற்படுத்தினார். இதனால் ஜனங்களின் முன்னேற்றத்திற்குரிய காரியங்களை அவர்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் தீர்மானித்து நடத்த உரிமை பெற்றனர். இதன்படி நகர பரிபாலன சபைகளும் (முனிஸிபாலிடிகள்), ஜில்லா சபைகளும் (ஜில்லா போர்டு



ரிப்பன் பிரபு

கள்) ஏற்பட்டன. ஜனப்பிரதிநிதிகள் அவைகளின் அங்கத்தினராகிக் கல்வி, சுகாதாரம், ஜலவசதி, விளக்குப்போடல் முதலிய காரியங்களைக் கவனித்து வருகின்றனர். சென்னை போன்ற பெரிய நகரில் உள்ள பரிபாலன சபை கார்ப்பொரேஷன் எனப்படும்.

கர்ஸன் பிரபு (கி. பி. 1898-1905): இவர் இந்திய மக்களின் நன்மைக்கான காரியங்சள் பல செய்தார். வியாபாரம், கைத் தொழில் ஆகிய இவைகள் அபிவிருத்தி அடைய ஒரு தனி இலாகா இவர் ஏற்படுத்தினர். கல்வி அபிவிருத்தி அடையப் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆரம்பப்பாடசாலைகள் பல ஏற்பட்டன. இருப்புப் பாதைகள் அதிகமாயின. இந்திய நாகரிகத்தை வெளிப்படுத்தும் பழமையான கோயில்களும், மசூதிகளும் பாழடையாமல் பாதுகாப்பதற்குக் கர்ஸன் ஒரு சட்டம் இயற்றினர்.

கர்ஸன் பிரபு

மின்டோ பிரபு (கி. பி. 1905-10): கர்ஸனுக்குப் பிறகு மின்டோ பிரபு வைஸராயானர். இவர் காலத்தில் ஜனங்களுக்கு அரசியல் பயிற்சி கொடுக்க முயற்சிகள் செய்யப்பட்டன. மாகாணச் சட்ட சபையிலும்,

இந்தியா சட்ட சபையிலும் முன்னைவிட அதிகமாக ஜனப்பிரதிநிதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். வைஸ்ராயின் கவுன்ஸிலிலும், இந்தியா மந்திரியின் கவுன்ஸிலிலும் ஒரு இந்தியர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார்.

செம்ஸ்போர்ட் பிரபு (கி. பி. 1916-21): இவர் காலத்தில் கி. பி. 1919-ல் இந்திய அரசாங்கத்தில் சில புதிய சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. இவற்றின் பிரகாரம் கூடிய சட்ட சபைகளில் ஜனப் பிரதிநிதிகளின் தொகை அதிகமாயிற்று. அரசாங்க நிர்வாகம் இருபாகங்களாகப் பிரிக்கப்பட்டது. ஜனப் பிரதிநிதிகளிலிருந்து கவர்னர் தெரிந்தெடுத்த மந்திரிகள் ஒரு பிரிவையும், அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட நிர்வாக அங்கத்தினர்கள் மற்றொரு பிரிவையும் கவனித்து வந்தார்கள். பண வரவு செலவு, போலீஸ் முதலியவை அரசாங்க நிர்வாக சபையார் மேல் பார்வையிலும், கல்வி, சுகாதாரம் முதலியவை மந்திரிகளின் கவனத்திலும் இருந்துவரலாயின. இந்த ஏற்பாட்டிற்கு இரட்டை ஆட்சி என்று பெயர்.

செம்ஸ்போர்ட் பிரபு

வெல்லிங்டன் பிரபு (1931-36): கி. பி. 1919-ம் வருஷத்திய அரசாங்கச் சீர்திருத்தச் சட்டம் இந்தியருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. தங்களுக்குச் சுய ஆட்சி அளிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கோரினார்கள். இந்தக் கோரிக்கையை இந்திய தேசீய மகா சபை (இந்தியன் நேஷனல் காங்கிரஸ்) மூலமாக அவர்கள் வெளியிட்டனர். மகாத்மா காந்தி என்னும் பெரியார் அதன் தலைமை வகித்து அக்கோரிக்கையை அரசாங்கத்துக்குத் தெரிவித்துக் கிளர்ச்சியை நடத்தி வந்தார். ஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கி ஆங்கிலேய அரசாங்கத்தார் கி. பி. 1935-ல் ஒரு சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அதன்படி இந்திய அரசாங்கத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. மாகாண அரசாட்சி முழுவதும் ஜனப்பிரதிநிதிகளான மந்திரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. முன்னைவிட அதிக ஜனங்களுக்கு வோட் உரிமை கொடுக்கப்பட்டது. இச்சட்டம் கி. பி. 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் அமுலுக்கு வந்தது.



மகாத்மா காந்தி

நம்முடைய சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் தலைவர்கள் ஜனப்பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்

பட்டு மந்திரி பதவி பெற்றுச் சுமார் இரண்டரை வருஷ காலம் அரசாங்கத்தை நடத்தினுர்கள். சென்ற 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஆங்கிலேயருக்கும், ஜெர்மெனியருக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளும் விஷயத்தில் காங்கிரஸ் கக்ஷியினர்க்கும், ஆங்கிலேய அரசாங்கத்

ஆரும் ஜார்ஜ் மன்னர்

தாருக்கும் சில அபிப்பிராய பேதங்கள் ஏற்படவே காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்து விட்டனர். மாகாண கவர்னர் அட்வைஸர்கள் என்று சொல்லப்படும் மூன்று ஆங்கிலேயப்

பிரபுக்களின் உதவியைக் கொண்டு அரசாட்சியை நடத்தி வருகிறார்.

கி. பி. 1936-ம் வருஷம் முதல் லின்லித்கோ பிரபு நமது வைஸராயாக இருந்து வருகிறார். இப்பொழுது நமக்குச் சக்கரவர்த்தியாயிருப்பவர் ஆறும் ஜார்ஜ் மன்னர் ஆவார்.

கேள்விகள்

1. ரிப்பன் பிரபு, கர்ஸன் பிரபு ஆகிய இவர்கள் இந்தியருக்குச் செய்த நன்மைகள் என்ன?

2. மாகாண இரட்டை ஆட்சி எப்பொழுது ஏற்பட்டது? அந்த ஆட்சி முறையை விளக்கு.

3. 1935-ம் வருஷத்துச் சட்டம் ஏற்பட்ட காரணமென்ன? அதன் முக்கிய அம்சம் என்ன?


இந்தியா-1937
ஆப்கானிஸ்தானம்
காபூல்
காஷ்மீரம்
ஸ்ரீ நகர்
திபேத்
பஞ்சாப்
லாஹூர்
டில்லி
நேபாளம்
பிகானிர்
லக்னோ
அலகபாத்
அஸ்ஸாம்
இராஜபுதனம்
ஷில்லாங்
கல்கத்தா
பர்மா
நாகபுரி
கட்டாக்
பம்பாய்
நிஜாம் இராஜ்யம்
வங்காளக் குடாக்கடல்
கோவா
அராபிக் கடல்
மைசூர்
சென்னை
மங்களூர்
புதுச்சேரி
கொழும்பு
பிரிட்டிஷ் ராஜ்யம்
சுதேச நாடுகள்

2297